விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 16 சனிக்கிழமை (29.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131

## பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டம்
# அடக்கு முறைகளுக்கு துணை புரியக்கூடியது
## ஐ.நா. அறிக்கையாளர் அதிருப்தி

(ஜெனிவா)

இலங்கையின் புதிய பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டத்தின் சில கோட்பாடு மற்றும் வரையறை தொடர்பில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து சில அமைப்புகள் தமது அதிருப்திகளை முன்வைத்துள்ள நிலையில், திட்டமிட்ட படுகொலைகள் மற்றும் பலவந்தப் படுகொலைகள் தொடர்பான ஐ.நாவின் முன்னாள் சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ்ரோப் கெய்ன்சும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மீதான தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். (04-ம் பக்.)



## விபத்துக்குள்ளான இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

விபத்தில் படுகாயமடைந்து சுமார் மூன்றரை மாதங்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 23

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(பரந்தன்)

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டு 23

## மே தினத்துக்கு 5ஆயிரம் பேருந்து

(கொழும்பு)

இம்முறை மே தின ஊர்வலங்களுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் 5ஆயிரம் பேருந்துகளை கோரி 23

## ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு!

(கொழும்பு)

திறைசேரி முறிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக் 24

### தனியான அரசாங்கம்
## 2020-ம் ஆண்டில் ஐ.தே.க திட்டம்

(கொழும்பு)

நாட்டில் நடைமுறையில் உள்ள முறையான மற்றும் திட்டமிட்ட வேலைத்திட்டங்கள் ஊடாக 2020-ம் ஆண்டில் 23

## அலரி விதை உட்கொண்ட பெண் சாவு

(சாவகச்சேரி)

அலரி விதை உட்கொண்ட இளம் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் அலரி விதை உட்கொண்ட பிரஸ்தாப 23

## ஜனாதிபதியின் கருத்தை பெரிதுபடுத்தி விட்டனர்
### அமைச்சர் ஜோன் விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் வெறுமனே கூறிய கருத்து பெரிதுப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகை 23

## வித்தியா கொலை வழக்கில் திருப்பம்
### சந்தேக நபர்களில் இருவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் பாலியல் வன்புணர்வின் பின்னரான படுகொலை வழக்கில் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

குறித்த வழக்கின் சந்தேக நபர்களில் இருவரை சட்டமா அதிபர் திணைக்களம் விடுதலை செய்துள்ளமையாலேயே இப்புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 24

## புலம்பெயர் புலி ஆதரவாளர்களே நாட்டில் குழப்பம் விளைவிக்கின்றனர்
### சாடுகிறார் சாந்த பண்டார



(கொழும்பு)

வடக்கு கிழக்கில் நடைபெறும் ஹர்த்தால் போராட்டம் சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிட்ட அவர், படைகளைக் கொண்டு போராட்டங்களை 23

### யாழ்.பல்கலைக்கழக
## துணைவேந்தராக விக்னேஸ்வரன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக தற்போதைய விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ அறிவித் 23

## படகுகளை விடுவித்தல்

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்புத் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டு உள்ள இந் 23

## இலங்கை - ஈரான் பேச்சு

(கொழும்பு)

பாதுகாப்பு குறித்து இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார் 23

## ஹக்கீம் - சம்பந்தன் சந்திப்பு

(கொழும்பு)


அம்பாறை இறக்காமம் மாணிக்கமடு விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 23

## புதிய பயங்கரவாதச் சட்டம் சமநிலை தன்மையை பேணும்!
### பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா கருத்து

(கொழும்பு)

கடந்த காலத்தில் பயங்கரவாத தடுப்புச் சட்டம் தவறான வகையில் கையாளப்பட்டுள்ளது என்பதே உண்மையான காரணியாகும். புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் பயங்கரவாத தடுப்பு மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல் என்ற இரண்டு விடயத்தின் சமநிலைத்தன்மையும் உருவாக்கப்படும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

சர்வதேச தரப்பிடம் இலங்கை கொடுத்த வாக்குறுதிக்கும் ஜீஎஸ்பி பிளஸ் வரிச் 24



## தாயகம் திரும்பும் இலங். அகதிகள்

(சென்னை)

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் போது இந்தியாவில் தஞ்சமடைந்த இலங்கை அகதிகளில் 28 பேர் நேற்று தாயகம் திரும்பியுள்ளனர்.

நேற்றுக் காலை 9.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

சென்னையிலிருந்து 18 பேரும், திருச்சியிலிருந்து 10 பேருமே இவ்வாறு 24

## விசாரணை கோரி கடிதம்

(கொழும்பு)

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் சிறை அதிகாரிகளால் தமிழ் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனை விநியோகஸ்தர்

# தேவை

**Uni Lanka Trading Company (Pvt) Ltd**

எமது நிறுவன உற்பத்திப் பொருட்கள்

- குடிநீர் போத்தல்
- மென்பானங்கள்
- இனிப்புப் பண்டங்கள்
- பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகள் (ஒனியன் பிஸ்கட், ரிப்பி, மிக்ஷர் வகை, மேலும் பல...)

**இவற்றுக்கான வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான விநியோகஸ்தர்கள் தேவை.**

**நிபந்தனை**

பிணை வைக்கக்கூடிய தகுதி
வாகனம் மற்றும் களஞ்சிய வசதி இருத்தல் வேண்டும்.

(C-8416)

தொடர்புகளுக்கு:- **அ. சுஜன்**

**077 400 9123**

**011 298 2429**


# மே 12, 13, 14-ம் திகதிகளில் சர்வதேச பௌத்த மாநாடு

## ஜனாதிபதி தலைமையில் நேற்று ஆராய்வு

ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் தின கொண்டாட்டங்களும் சர்வதேச பௌத்த மாநாடும் எதிர்வரும் மே மாதம் 12,13,14 ஆகிய 3 தினங்களில் கோலாகலமாக கொழும்பில் நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மே மாதம் 12ஆம் திகதி நடைபெறவுள்ள ஆரம்ப வைபவத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உலகின் பல பௌத்த நாடுகளையும் சேர்ந்த விசேட பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கண்டி தலதா மாளிகையில் நிறைவு நாள் வைபவமும் இதன்போது நடைபெறவுள்ளது.

மே மாதம் 07ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையான காலம் வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், அக காலபகுதியில் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதனுடன் இணைந்ததாக பத்தரமுல்ல அபேகம வளாகத்திற்கு அண்மையில் பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தியவன்னா வெசாக் வலயமும் தொடர்ச்சியாக ஐந்து நாட்களுக்கு மிகக் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

இச்செயற்றிட்டங்களின் ஒருங்கிணைப்பு தொடர்பான நீண்ட கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றதுடன், உலக வாழ் பௌத்த மக்களின் தரும சிந்தனைகளும் பௌத்த மதத்தின் புனிதமும் உலகம் முழுதும் கொண்டு செல்லப்படும் வகையில் இந்த செயற்றிட்டங்களை ஒழுங்குசெய்வதன் முக்கியத்துவம் குறித்தும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக் காட்டினார்.

வணக்கத்துக்குரிய கொடுகொட தம்மாவாச மகாநாயக்க தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும், சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்கள் பாட்டலி சம்பிக்க ரணவக்க, எஸ்.பீ. நாவின்ன, சாகல ரத்நாயக்க, வஜிர அபேவர்தன ஆகியோரும் இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, பிரதி அமைச்சர்கள் சாரதீ துஸ்மந்த மித்ரபால, கரு பரணவிதான ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன், புத்த சாசன அமைச்சின் செயலாளர் சந்திர சோம கமகே ஆகியோர் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவின் பிரதானிகளும இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.(செ-11)

## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல் - திருத்தம்

தவிசாளர், பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலரால் 'மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகின் மூலம் 2017ம் ஆண்டில் நடைமுறைப்படவுள்ள அனர்த்த தணிப்புச் செயற்றிட்டங்களுக்கு தகைமையுடையோரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன' என்பது தொடர்பாக 12.04.2017ம் திகதி பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக கீழ் குறிப்பிடப்படும் விடயமும் சேர்க்கப்படுகிறது என்பதனை அறியத்தருகின்றேன்.

**'பொது நிதிச் சுற்றறிக்கை 4/2016ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது வட மாகாணத்துக்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது'**

**திருமதி சு. தெய்வேந்திரம்**
மேலதிக அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்

(C-8413)


# JMC Projects (India) Ltd

An ISO 9001, ISO 14001 (EMS) & OSHAS - 18001 Company

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக உலகின் பல பாகங்களிலும் வணிக மற்றும் நிறுவன கட்டட நிர்மாணம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு நிர்மாணம், கைத்தொழில் மற்றும் உட்கட்டமைப்பு நிர்மாணத்துறைகளில் மிகச்சிறந்த அனுபவமுள்ள **JMC Projects (India) Ltd** நிறுவனத்துக்கு **யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டத்தின்** கீழ் பணியாற்ற கீழ்க்காணப்படும் பதவி நிலைகளுக்குரியவர்கள் தேவைப்படுகின்றார்கள்.

**Positions**

| S.No. | Description | Qualification | No of Vacancies | Experience | Field |
|---|---|---|---|---|---|
| 1. | Quantity Surveyor | BSc degree in quantity surveying or eqv. | 01 | 5 Years | water pipe line |
| 2. | Technical officer (pipe line) | Diploma in Civil engineering | 04 | 4-7 Years | DI Pipe line |
| 3. | Technical officer (QA/QC) | Diploma in Civil engineering | 02 | 4-7 Years | Water projects |
| 4. | Supervisors | Certificate level in civil engineering or eqv. | 03 | 4 -7 Years | Water/ Infra Project |
| 5. | Carpenter ( Form work) | Better knowledge of form working | 20 | 5 Years | Water retaining structure |
| 6. | Carpenter – Assistant ( Form work) | Knowledge of form working | 20 | 1 Year | Water retaining structure |
| 7. | bar bender | Better knowledge of bar bending | 20 | 5 Years | Water retaining structure |
| 8. | Bar bender - Helper | Knowledge of bar bending | 20 | 1 Year | Water retaining structure |
| 9. | DI Pipe fitter | Better knowledge of more than 600 mm dia pipe fitting | 10 | 5 Years | DI Pipe line |
| 10. | DI Pipe fitter - Helper | Knowledge of more than 600 mm dia pipe fitting | 40 | 1 Year | DI Pipe line |
| 11. | Hydra crane operator | Have valid certificate & License | 03 | 5 Years | DI Pipe line |
| 12. | JCB Backhoe loader operator | Have valid certificate & License | 03 | 5 Years | DI Pipe line |
| 13. | Semiskilled labours | | 40 | 2 Years | DI Pipe line |
| 14 | Unskilled labours | | 40 | 6 Months | Pipe line |

பதவிநிலை மற்றும் சம்பளம் ஆகியன தகைமை மற்றும் தொழில் அனுபவம் ஆகியவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 02.05.2017 தொடக்கம் 05.05.2017 வரையான நாட்களில் காலை 10.00 தொடக்கம் மாலை 05.00 வரை நேர்முகத்தேர்வில் பங்குபற்றலாம்.

இடம்: **JMC Projects (India) Ltd,** ஐயா கடையடி A9 வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

தொடர்பு கொள்ள வேண்டியவர்: திரு. பபில்ராஜ் (0763166448), திரு. சுரேந்திரன் (0767892513) (8867)


# தொழிலாளர் உரிமை பாதிப்படையாது

(கொழும்பு)

நாட்டில் பாரிய சர்ச்சையையும் கருத்து வேறுபாடுகளையும் ஏற்படுத்தக் கூடிய கருத்தை ராஜித சேனாரத்ன வெளியிட்டுள்ள போதிலும் அதனூடாக எந்தவித தொழில் ரீதியான உரிமைகளும் சீர்குலைக்கப்பட மாட்டாது என தொழில்துறை அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரத்ன நேற்று தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு உயர்ந்த பதவிகள் வழங்கப் என ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் வெளியிட்ட பதிலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொழில்துறை அமைச்சர் என்ற வகையில் தொழிற்சங்க தலைவர்கள் இது தொடர்பாக தம்மிடம் கருத்து கோரியதாக தெரிவித்த அமைச்சர் செனவிரத்ன,

ஜனாதிபதி எந்தவொரு தருணத்திலும் தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் வகையிலோ, சீர்குலைக்கும் வகையிலோ செயற்பட இடமளிக்க மாட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


## வாடகைக்கு

சங்கானை தேவாலய வீதியில் நான்கு பரப்புக் காணிக்குள் மூன்று அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (8866)

தொடர்பு:- 077 835 5485


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத உற்பத்தியை தடை செய்வதே சமாதானத்தை ஏற்படுத்த சிறந்த வழி

## உலக நாடுகளுக்கு ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை

(கொழும்பு)

உலகில் யுத்த நெருக்கடியை தவிர்ப்பதற்கு நாம் கலந்துரையாட வேண்டியது யுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் அல்ல. யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்களை உற்பத்தி செய்பவர்களுடனேயாகும் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தமது நாட்டில் ஆயுதம் உற்பத்தி செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து அரசாங்கங்களுக்கும் முடியுமானால் அது உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கையாக இருக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



இன்று உலகிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கு ஆன்மீகத் தலைவர்களின் வழிகாட்டல் மிகவும் அவசியமானதாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற சர்வதேச இஸ்லாமிய மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

'இஸ்லாமிய யதார்த்தமும் தற்கால சவாலும்' என்ற கருப்பொருளின் கீழ் கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த இரண்டு நாள் மாநாட்டில் மத்திய கிழக்கிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் ஆசிய பிராந்திய நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

அனைத்து இனங்கள் மற்றும் சமயங்களுடன் இணைந்து அனைத்து மனித உரிமைகளையும் மதித்து சுமுகமாக உலக மக்களுடன் செயற்படும் செய்தியை உலகிற்கு வழங்கும் நோக்குடன் இலங்கை இஸ்லாமிய நிலையத்தினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாம் அனைவரும் ஒரே நாட்டில் இலங்கையர்களாக வாழ்வதற்கு உறுதிபூணுவோமானால் நாம் எதிர்பார்க்கும் அமைதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவது கடினமானதல்ல என்று ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

தம்முடையதைப் போன்று அடுத்தவர்களுடைய உரிமைகளையும் சலுகைகளையும் மதிப்பதன் மூலமே இன்று பேசப்படுகின்ற நல்லிணக்கத்தை யதார்த்தமாக மாற்ற முடியும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி. நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தி அனைத்து மக்கள் மத்தியிலும் சகோதரத்துவத்தையும் நல்லிணக்கத்தையும் பலப்படுத்தி இதனை ஒரே நாடாக கட்டியெழுப்புவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

மனிதன் அதிகாரத்திற்காகவும் செல்வத்திற்காகவும் போராடியதன் இறுதிவிளைவு மனிதன் மற்றைய மனிதனை அழிவுக்குட்படுத்தியமையாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகில் யுத்த நெருக்கடியை தவிர்ப்பதற்கு நாம் கலந்துரையாட வேண்டியது யுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் அல்ல. யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்களை உற்பத்தி செய்பவர்களுடனேயாகும் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி. தமது நாட்டில் ஆயுதம் உற்பத்தி செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்து அரசாங்கங்களுக்கும் முடியுமானால் அது உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கையாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய. அமைச்சர் அப்துல் ஹலீம். இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி. ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்தின் தலைவர் ஹுசைன் முஹம்மது ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## பரராஜசிங்கம் படுகொலை; பிள்ளையானின் மறியல் நீடிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 4 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் மே 12 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.கணேசராஜா முன்னிலையில் நேற்று இவர்களை ஆஜர் படுத்தியபோதே. நீதவான் இவர்களுக்கான விளக்க மறியலை நீடித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணானந்தராஜா. கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் எம். கலீல் ஆகியோருக்கே விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம். 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4. பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீதிமன்றத்தை அவமதித்ததைக் கண்டித்து திருமலையில் சட்டத்தரணிகள் போராட்டம்

(கொழும்பு)

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்குமாறு, திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு பிரதி கிழித்தெறியப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்ட சட்டத்தரணிகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

கவனயீர்ப்பு போராட்டம் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்று அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.





கிழக்கு மாகாண சபையின் 76 ஆவது அமர்வு கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றுக் கொண்டிருந்த போது. மாகாண சபைக்கு முன்பாக பிரதான வீதியை வழிமறித்து பட்டதாரிகள் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த விடயம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து. போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா இடைக்கால உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இந்த இடைக்கால உத்தரவின் பிரதியை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த. அகில இலங்கை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் தென்னே ஞானானந்த தேரர் கிழித்தெறிந்தார். இந்த நடவடிக்கைக்கு எதிராகவே நேற்று சட்டத்தரணிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)

## சீனாவின் முதலீடுகள் மற்ற நாடுகளின் நலன்களுக்கு எதிரானது அல்ல! -சீனா

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார திட்டங்கள் மீதான சீனாவின் முதலீடுகள். மற்றைய நாடுகளின் இலங்கை மீதான நலன்களுக்கு எதிரானது அல்ல என்று. சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

வெற்றி பெறும் ஒரு ஒத்துழைப்புடனே. இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மற்றைய நிறுவனங்கள், இலங்கையின் மீது கொண்டுள்ள ஆர்வத்துக்கு இது எதிரானதாக இருக்காது என்றும் தூதரகம் சுட்டிக் காட்டியுள்ளது.

சீன நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்படும் அம்பாந்தோட்டை துறைமுகம் காரணமாக, தங்களது நல னுக்கு தீங்கு விளையும் என்று, இலங்கை மீது ஆர்வம் கொண்டுள்ள மற்றைய நாடுகள் கருத வேண்டிய அவசியம் இல்லை என்றும் தூதரகம் விடுத்து சீன செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (இ-7)

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு முறையான திட்டமிடல் இல்லையாம்

### தினேஷ் எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அனர்த்த நிலைமைகளின் போது முகங்கொடுக்கும் விதத்தில் சரியான திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

குப்பைகளை அகற்றுவது சம்பந்தமாக மற்றும் மீதொட்டமுல்ல குப்பை மேடு சம்பந்தமாக நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் நாங்கள் சிங்கம் டெல்லியை வீழ்த்தியது கொல்கத்தா



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரண்டு ஆட்டங்கள் நடைபெற்றன. முதல் ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - டெல்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் சஞ்சு சாம்சன், கருண் நாயர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். டெல்லி அணியின் ஓட்டங்கள் 4.5 ஓவரில் 48 ஓட்டங்களாக இருக்கும்போது கருண் நாயர் 15 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து சஞ்சு சாம்சன் உடன் ஷ்ரேயாஸ் அய்யர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அரைச்சதம் அடித்த சாம்சன் 38 பந்தில் 4 பவுண்டரி, 3 சிக்சருடன் 60 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அப்போது டெல்லி அணி 14 ஓவரில் 123 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து வந்த பந்த் 6 ஓட்டங்களிலும், அய்யர் 47 ஓட்டங்களிலும் வெளியேற டெல்லி அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்வில் மந்த நிலை ஏற்பட்டது.

கிறிஸ் மோரிஸ் 11 ஓட்டங்களும், கோரி அண்டர்சன் 2 ஓட்டங்களும், அங்கித் பவ்னி ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களும் எடுக்க டெல்லி அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 160 ஓட்டங்கள் எடுத்தது. கடைசி 36 பந்தில் 37 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பின்னர் 161 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணியின் சுனில் நரைன், கம்பீர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். சுனில் நரைன் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரபாடா பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து உத்தப்பா களம் இறங்கினார்.

6-வது ஓவரை ரபாடா வீசினார். அந்த ஓவரின் 3-வது பந்தை உத்தப்பா லெக் சைட்டில் தூக்கி அடித்தார். பந்து எட்ஜ் ஆகி வானத்தை நோக்கி பறந்தது. மிஸ்ரா மற்றும் சஞ்சு சாம்சன் பந்தை பிடிக்க ஓடினார்கள். இருவரும் ஒருவருக்கு ஒருவர் நான் பிடித்துக் கொள்கிறேன் என்று சைகை காட்டி ஓடி வந்தனர். பந்து அருகில் வரும்போது இருவரும் பிடிக்காமல் அப்படியே நின்று விட்டனர். இதனால் 10 பந்துகளில் 8 ஓட்டங்களோடு வெளியேற வேண்டிய உத்தப்பா கண்டத்தில் இருந்து தப்பினார்.

அப்போது கொல்கத்தா அணி 5.3 ஓவரில் 37 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. தனக்கு கண்டம் தப்பியதையடுத்து உத்தப்பா ருத்ரதாண்டவம் ஆடினார். அந்த ஓவரில் ஒரு பவுண்டரி விளாசிய அவர், 8-வது ஓவரில் இரண்டு சிக்ஸ், ஒரு பவுண்டரி பறக்க விட்டார். கம்மின்ஸ் வீசிய 9-வது ஓவரில் ஒரு சிக்ஸ், ஒரு பவுண்டரி பறக்கவிட்டார்.

அத்துடன் 24 பந்தில் அரைச்சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய உத்தப்பா, 33 பந்தில் 55 ஓட்டங்கள் எடுத்து ரன்அவுட் ஆனார். அவரது ஓட்டங்களில் 5 பவுண்டரி, 4 சிக்சர்கள் அடங்கும். கேட்சில் இருந்து தப்பிய உத்தப்பா, 25 பந்தில் 47 ஓட்டங்கள் குவித்துவிட்டார்.

உத்தப்பா ஆட்டமிழப்பைத் தொடர்ந்து மணீஷ் பாண்டே களம் இறங்கினார். மறுமுனையில் கம்பீர் 39 பந்தில் 7 பவுண்டரியுடன் அரைச்சதம் அடித்தார். அணியின் ஓட்டங்களாக 139 இருக்கும்போது மணீஷ்



பாண்டே ஆட்டம் இழந்தார். 4-வது விக்கெட்டுக்கு கம்பீர் உடன் ஜாக்சன் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது. கொல்கத்தா அணி 16.2 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கம்பீர் 71 ஓட்டங்களுடனும், ஜாக்சன் 12 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் கொல்கத்தா அணி 9 போட்டியில் 7 வெற்றிகளை ருசித்துள்ளது.

## அடக்கு முறைகளுக்கு ...

இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக அண்மையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக மனித உரிமைகளுக்கான நிறுவகம் மற்றும் அனைத்துலக மற்றும் ஆபிரிக்காவில் நிலவும் தொடர்புபட்ட சட்டத்திற்கான பிரிட்டோரியா நிறுவகம் (ICLA) ஆகியன இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

இந்தக் கூட்டறிக்கையை ICLA நிறுவகத்தின் இயக்குனரும், திட்டமிட்ட படுகொலைகள் மற்றும் பலவந்தப் படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் சிறப்பு அறிக்கையாளருமான பேராசிரியர் கிறிஸ்ரோப் கெய்ன்ஸ் மற்றும் ICLA நிறுவகத்தின் ஆலோசகரான ரொபி பிஷர் ஆகிய இருவரும் இணைந்து தயாரித்துள்ளனர்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது அசாதாரண அதிகாரங்களை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதாவது சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் காணப்படாத அதிகாரங்களை இச்சட்டம் கொண்டுள்ளது. இவ்வாறான அசாதாரண அதிகாரங்கள் அடக்குமுறையைப் பிரயோகிப்பதற்கு துணைபுரிகின்றன' என இக்கூட்டு ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு அதிகாரங்களை வழங்குகிறது. குறிப்பாக கைது செய்வதற்கான அதிகாரம், சந்தேகத்தின் பேரில் நீண்ட காலம் தடுத்து வைப்பதற்கான அதிகாரம், சொத்துக்களை சுவீகரிப்பதற்கான அதிகாரம், ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அதிகாரம், போக்குவரத்துத் தடைகளை விதிப்பதற்கான அதிகாரம், நிறுவனங்களைத் தடைசெய்வதற்கான அதிகாரம் எனப் பல்வேறு அசாதாரண அதிகாரங்களை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குகிறது.

இவை அனைத்தும் அடிப்படை உரிமைகளை அடக்குவதற்குப் போதுமானதாகும். இதேபோன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் இரண்டாவது பகுதியில் இச்சட்டத்

(23ஆம் பக்கம் பார்க்க)

AIR COOLER&
AIR CONDITIONERS, TV'S
SPECIAL OFFER SPECIAL

எங்குமே இல்லாத விலைக்கழிவில் எம்மிடம்

Telesonic Air Cooler
1 YEAR WARRANTY
16,480/=

PORTABLE AC 12000 BTU
RS: 59,500/=
நீங்கள் விரும்பிய இடங்களிற்கு கொண்டு சென்று பாவிக்க கூடியது.
விசேட விலைக்கழிவுடன் Kings Electronics (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து இன்றே வாங்கிச் செல்லுங்கள்

Sony 5.1 Home Theater
RS 22,500/=
1 YEAR WARRANTY

LED TELEVISIONS
Samsung 32" -29900/ =
Hisence 32" -24500/ =
Hisence 24" -17900/ =
Tcl 32" -21900/ =
Panasonic 32" -28500/ =
Sony 32" -33600/ =
3 YEARS

Wall Split Mounted AC
With Installation

| Btu | Media | Panasonic |
| --- | --- | --- |
| 9000 BTU | 58,500/= | 79,500/= |
| 12000 BTU | 62,500/= | 86,500/= |
| 18000 BTU | 78,500/= | 109,500/= |


5 YEARS WARRANTY

STAND FAN
RS.2900.00
ONEYEAR WARRANTY

SONY
43" SMART FULL HD RS.82, 900 ONLY
48" SMART FULL HD RS.119,900 ONLY
HDMI 3 Years Warranty WiFi YouTube X-Reality

KINGS ELECTRONICS(PVT) LTD (C-8414)
12A, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
021-4546699 mykings.lk kingsjaffna

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
| --- | --- | --- |
| 08 | | 27 |
| 09 |  | 04 |
| 1946 | | 2017 |

# ஆறுமுகம் நடராசா

யாழ். வடமராட்சி அல்வாய் கிழக்கு, சுப்பர்வளவையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா அவர்கள் கடந்த (27.04.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், பூபாலசிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், முருகதாஸ் (பிரித்தானியா), கண்ணதாசன் (பிரித்தானியா), துஸ்யந்தினி (பிரித்தானியா), மோகனதாஸ் (பிரித்தானியா), துவாரகா, கம்சாயினி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற இராசம்மா, இரத்தினம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தகுமார், கௌரி, சிவரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராமச்சந்திரன் ஆனந்தன், சோதி, ஜெயம், சிறி, தேவன், கணேஸ்ரதி, ஜீவா, லதா, ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சண்முகநாதன், சரோயினிதேவி, யோகராணி, புஸ்பமலர், லோகேஸ்வரன், தனபாலன், லோகநாதன், ராணி, அற்புதராசா, அற்புதரவி, சுமதி, அற்புதராணி, கௌரி ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், அனு, மகிந்தன், துர்ஷிகா, மிதுனா, ஆதனா, ஆருஸ் டிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2017) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
முருகதாஸ் (மகன்) - பிரித்தானியா : +447404893588
கண்ணதாசன் (மகன்) - பிரித்தானியா : +447853830432
மோகனதாஸ் (மகன்) - பிரித்தானியா : +447417587654
கஜேந்திரன் (மகன்) : +94766108191

தகவல் : குடும்பத்தினர்

(C-8415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக சுதந்திரத்தில் இலங்கை 141 ஆவது இடத்தில்

ஊடக சுதந்திரம் குறித்து எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பால் 180 நாடுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட இந்த ஆண்டுக்கான வருடாந்த பட்டியலில் இலங்கை 141 ஆவது இடத்திலுள்ளது.

மேற்படி அமைப்பால் ஊடக சுதந்திர பட்டியலை உள்ளடக்கி வெளியிடப்பட்ட அறிக்கையில் ஊடக சுதந்திரம் ஒரு போதும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நாடுகளில் 62 சதவீதமான நாடுகளில் இந்த வருடத்தில் ஊடக சுதந்திரத்தில் வீழ்ச்சி நிலை காணப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கிறது.

ஊடகவியலாளர்களுக்கான சுதந்திரம் உயர் மட்டத்தில் பேணப்படும் நாடுகளில் முதலிடத்தில் நோர்வே உள்ளது. இதற்கு அடுத்து வரும் இடங்களில் சுவீடன், பின்லாந்து, டென்மார்க், நெதர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. ஊடகவியலாளர்களின் சுதந்திரத்துக்கு கடும் முட்டுக்கட்டைகளை விதித்துள்ள வட கொரியாவானது இந்தப் பட்டியலில் இறுதி இடமான 180 ஆவது இடத்திலுள் ளது. அந்நாட்டிற்கு அடுத்ததாக ஊடக சுதந்திரம் மிக மோசமான நிலையிலுள்ள நாடுகளாக எதியோப்பியா, துர்க்மெனிஸ்தான், சிரியா, சீனா ஆகிய நாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதேசமயம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் லாவோஸ், பாகிஸ்தான், சுவீடன், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் ஊடக சுதந்திரம் முன்னேற்ற நிலையில் உள்ளதாக தெரிவிக்கும் அந்த அறிக்கை சவுதி அரேபியா, எதியோப் பியா, மாலைதீவு மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளில் ஊடக சுதந்திரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரிதும் வீழ்ச்சிடைந்துள்ளதாக கூறுகிறது.

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு கண்டனம்

அதேசமயம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஊடகங்கள் போலியான செய்திகளை வெளியிட்டு வருவதாக அவற்றை அடிக்கடி தாக்கிப் பேசுவதை வழமையாகக் கொண்டுள்ளமை குறித்து மேற்படி அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் அமெரிக்கா 43 ஆவது இடத்திலுள்ளது.

அந்நாடு கடந்த ஆண்டில் அது பெற்றிருந்த நிலையிலிருந்து இரு இடங்களால் இந்த ஆண்டில் வீழ்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியம் இந்தப் பட்டியலில் 40 ஆவது இடத்திலும் இந்தியா 136 ஆவது இடத்திலும் உள்ளது. (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி. ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம் (பாக்கியம்)



ஏழாலை கிழக்கை பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம் (பாக்கியம்) 25.04.2017 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மனோன்மணி அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினம்-பர்வதம் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி (ஏரம்பு) என்பவரின் ஆருயிர் மனைவியும் வரதராஜா (வரதன்-சுவிஸ்), விக்னராஜா (விக்கி - நோர்வே) ஆகியோரின் அன்பு தாயாரும் சுகந்தினி (சுவிஸ்), பாமினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, தம்பித்துரை, செல்லத்துரை, கந்தையா, இரத்தினசிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரியும்

காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் சாரதாதேவி, சொர்ணம்மாதேவி, காலஞ்சென்றவர்களான மல்லிகா தேவி, சிவலிங்கம், சண்முகநாதன் (சந்திரன்) மற்றும் தவராஜா (mg குப்பிளான்), காலஞ்சென்ற லலிதாதேவி, மற்றும் சுசீலாதேவி (நோர்வே), காலஞ்சென்ற சித்ராதேவி ஆகியோரின் அன்பு மைத்தினியும் எழிலன், வினுஜன், அஸ்வினி (சுவிஸ்), சினேகா, ஹரிசனா (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30.04.2017 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் குப்பிளான் காடகடம்பன் இந்து மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சி- 8407

அம்பாள்குளம்,
கிளிநொச்சி.

தகவல்:-
மருமகள்:- -அனுஸா குமார்

# இராசி பலன்

29.04.2017
(சித்திரை 16, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திருதியை முற்பகல் 11.21 மணிவரை
ரோகினி பிற்பகல் 3.12 மணிவரை
சுபநேரம்-2.58-4.28 மணிவரை
இராகுகாலம்-8.58-10.28 மணிவரை
மங்கையற்கரசியார் குருபூசை
சதுர்த்தி விரதம், அஷ்ய திருதியை.

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் சந் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் இரவு 2.17 மணிக்கு மிதுன-சந் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பணமுண்டு.

**இடபம்:** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம்.

**கடகம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி:** பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கலாம், தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் கூடிய அக்கறை காட்ட [illegible] சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கைகள் கிடைக்கலாம்.

**தனுசு:** செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**மகரம்:** தாழ்ந்த சுபாபமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**கும்பம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**மீனம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்பதி தரும் வகையில் அமையும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவே ஏன் மௌனம்?

## காணாமற் போனோரின் உறவுகள் கேள்வி



(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் உறவினர்களினால் மருதங்கேணியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 45 நாளாகத் தொடர்ந்தது.

இதேவேளை காணாமற் போனோரின் உறவினர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்திற்கு ஆதாரவாக நேற்று முன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது அங்கு அமைக்கப்பட்டிருந்த பந்தலில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

மேலும் எட்டு ஆண்டுகளாக கதறுகிறோம், இனியும் தாமதம் வேண்டாம், அரசே உடனே பதிலைத்தா? இலங்கை அரசே உடனே பதிலைத்தா? இலங்கை அரசே இராணுவத்தின் கைகளில் ஒப்படைத்தஎமது உறவுகள் எங்கே? ஐ.நா. சபையே ஏன் மௌனம் போன்ற வாசகங்களை தாங்கியிருந்தனர். (இ-60)

# 'ஆடல் அரங்கம்' சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்திய துணைத் தூதரகம் சர்வதேச நடன தினத்தை முன்னிட்டு வழங்கும் ''ஆடல் அரங்கு'' சிறப்பு நடன நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.

வடக்கு மற்றும் மத்திய மாகாண பிரபல நடன ஆசிரியர்களான திருமதி சாந்தினி சிவநேசன், திருமதி கிருஷாந்திரவீந்திரா, திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், திருமதி ஷிவாந்தி இராமமூர்த்தி, திருமதி உமா சிறிதரன், யாழ். கல்விவலயநடனஆசிரியர்கள், யாழ். இந்து மகளிர் கல் லூரி நடன ஆசிரியர்கள், நாகேஷ்வரன் ஆகியோரின் நடன அளிக்கைகளின் நெறி யாள்கையில் இவ் ஆடல் அரங்க நிகழ்வு இடம்பெறவுள்ளது. (இ-3)

# புற்றுநோயாளர்கள் சிரமம்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கதிரியக்க இயந்திரம் பழுதடைந்து காணப்படுவதால் வடக்கு மாகாணத்தில் உள்ள புற்றுநோயாளர்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதிதாக புற்றுநோய் உள்ளது என இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு உடலின் எந்தப் பாகத்தில் கதிரியக்க சிகிச்சை அளிக்கவேண்டும் என்பதைக் கண்டறியும் Moulding Machine பழுதடைந்து உள்ளது.

ஏற்கனவே கதிரியக்க சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு வழமைபோன்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆயினும் அவர்களுக்கு வேறு பாகங்களில் தாக்கம் ஏற்பட்டு இருப்பின் அதனைக் கண்டறியமுடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இந்தக் கதிரியக்க இயந்திரம் பழுதுபார்க்கும் நிறுவனத்துடனான ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ளமையாலேயே கதிரியக்க இயந்திரம் திருத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது. அந்த நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்குக் கிட்டத்தட்ட ஒருகோடி ரூபா தேவை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையிலே மாகாண அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள புற்றுநோய் வைத்தியசாலையாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மட்டுமே காணப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு போதிய நிதி மற்றும் ஆளணிப் பற்றாக்குறையால் பல்வேறு அசௌகரியங்களுடன் இயங்கி வருகின்றது. (இ-3)

# தொழிலாளர் மேதினம்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் ஒத்துழைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் தொழிலாளர் மேதின நிகழ்வு யாழ். நூலக சிற்றுண்டிச்சாலை மண்டபத்தில் நாளை மறுதினம் முதலாம் திகதி பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.

இதில் தொழிலாளர் சாசனத்தை உடன் வெளியிடுக, தற்காலிகமாக- அமைய மற்றும் வெளிக்கள ஊழியர்களின் பதவிகளை நிரந்தரமாக்குக, நிறுவன ஊழியர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குக, வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்து போன்ற பிரதான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# புதிய மைதான திறப்பு விழாவும் 71வது ஆண்டு நிறைவு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அரியாலைஸ்ரீகலைமகள் சனசமூக நிலைய 71 ஆவது ஆண்டுவிழாவும் புதிய மைதானத் திறப்பு விழாவும் சனி, ஞாயிறு தினங்களில் இடம் பெறவுள்ளது. முதலாம் நாள் நிகழ்வுகள் இன்றுசனிக்கிழமை காலை 6 மணிக்கு நிலைய முன்றலில் இடம் பெறும். இரண்டாம் நாள் நிகழ்வான மைதானத் திறப்பு விழா நொத்தாரிஸ் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ கலைமகள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். நிலையத் தலைவர் க.சண் முகலிங்கத்தால் இம் மைதானம் திறந்து வைக்கப்படும்.

இரண்டாம் நாள் மதிய நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மதியம் ஒரு மணிக்கு நிலைய மைதானத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் ப.லக்ஸ்மன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை ஆணையாளர் பொன்னம்பலம் வாகீசன், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கனகரத்தினம் மயூரன், கதிரவேல் உதயகுமார் (நோர்வே), கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் சண்முகம் சிவபஞ்சாட்சரம், இரத்தினம் பாரதிதாசன் (பணிப்பாளர்-A.I.D.E.T.Action) திருமதி.சரஸ்வதி சிபாதம், திருமதி. சின்னப்பிள்ளை இராசதுரை, ஜே/91 கிராம சேவையாளர் இ.தங்கத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# சட்டவிரோதமாக மணல் அகழ்வு; ஹன்டர் பறிமுதல் சாரதி கைது

வடமராட்சி வல்லிபுரம் பகுதியில்சட்டவிரோதமானமுறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஹன்டர் ஒன்றை கைப்பற்றியதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஹர்த்தால் காரணமாகவீதிகள்அனைத்தும்வெறிச்சோடியிருந்த போதிலும் வல்லிபுரம் பகுதியூடாக மணல் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து அப்பகுதிக்குச்சென்றபருத்தித்துறைபொலிஸ் பொறுப்பதிகாரி சமன் ஜெயலத் ஹன்டரை பறிமுதல் செய்ததுடன் சாரதியையும் கைது செய்தார். (இ-60)

# மஹோற்சவம் இன்று ஆரம்பம்

கைதடி வீரகத்தி பிள்ளையார் ஆலய மஹோவம் இன்று சனிக்கிழமை முற்பகல்10.35 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

# 'முடிவில்லை' நூல் வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும்

விருட்சம் கலை மன்றம் வழங்கும் நிலா மகள் பிரபாகரன்விதுஜாவின் "முடிவில்லை" நூல் வெளியீடும் எ.ஜெ.எ. புரடக்ஷன் வழங்கும் கலைஞர் கௌரவிப்பும் நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத் தூதுகலையகத்தில்இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர்இமானுவல்ஆனோல்ட் , கௌரவ விருந்தினராக கிருபா சாரதிப் பயிற்சிப்பாடசாலை உரிமையாளர் அழகுசுந்தரம்கிருபாகரன்,சிறப்புவிருந்தினராக ரில்கோ ஹோட்டல் உரிமையாளர் தவராசா திலகராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




# உரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் வி-கௌரிபாலனின் காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல், சாத்திரியின் அவலங்கள், திரேசாவின் யோவான் 14:2 ஆகிய மூன்று கதைத் தொகுதிகளுக்கான உரையாடல் எழுத்தாளர் . சட்டநாதனின் தலைமையில் நாளை பிற்பகல் 3:30 மணிக்கு பழைய பூங்கா வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் (சுண்டுக்குளி தபாலகம் முன்பாக) இடம்பெறும். (இ-3)

# சாயி சமர்ப்பணம் தொடர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிறுவனத்தின் பொன்விழா ஆண்டையொட்டி இடம்பெறும் "சாயி சமர்ப்பணம் தொடர்-3'' இன்று சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சாயிசேவா நிலையத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் வடபிராந்திய முன்னாள் தலைவரும் சத்திய சாயி பாடசாலை முகாமைக்குழுவின் செயலாளரும் இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் வடமராட்சி சாயி நிலையங்களின் இணைப்பாளருமான ஸ்ரீ .வே.சேனாதிராஜா தனது அனுபவப் பகிர்வை ளிப்படுத்தவுள்ளார். (இ-3)

# அட்ஷய திருதியை தின சிறப்பு ஆராதனையும் தீப வழிபாடும்

அட்ஷய திருதியை தின சிறப்பு மகா லக்ஷ்மி ஆராதனையும் தீப பூஜை வழிபாடும் நீர்வேலி அருள் மிகு செல்லக் கதிர்காம ஸ்வாமி திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள மகாலக்ஷ்மி பூலக்ஷ்மி சமேத சுந்தரவரதராஜப் பெருமாள் சந்நிதி முன்பாக இன்று 29 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் இடம்பெறும். இதில் பொன் மழை பொழியும் கனதாரா ஸ்தோத்திர பாராயணமும் நிகழ்ந்து இரவு 7 மணியளவில் திருவருட்பிரசாதமும் வழங்கப்படும். (இ)

# அலங்காரத்திருவிழா

புன்னாலைக்கட்டுவன் தெற்கு அருள்மிகு ஸ்ரீ அண்ண மகேஸ்வரர் கோயில் அலங்காரத் திருவிழா கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்று வருகிறது. 11 நாட்கள் நடைபெறும் இத் திருவிழாவை முன்னிட்டு தினமும் இரவு 7 மணிக்கு நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கான கதாவாரிதி சிவ.வை.நித்தியானந்த சர்மா ''சிவனருட்செல்வர்'' என்னும் பொருளில் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார். (இ)



வெற்றிச் செல்வியின் ஐந்து நூல்களின் அறிமுக விழா நேற்று முன்தினம் யாழ். பொது நூலக மேல்தள மண்டபத்தில் இடம்பெற்றது. யாழ். பொது நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் அ.யேசுராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் "இப்படிக்கு அக்கா மற்றும் இப்படிக்கு தங்கை (கவிதை நூல்களும்), வெண்ணிலா (குறுநாவல்), ஈழப்போரின் இறுதி நாட்கள் (வரலாற்றுப் பதிவு), போராளியின் காதலி (நாவல்) ஆகிய ஐந்து நூல்கள் அறிமுகம் செய்யப்பட்டு அறிமுக உரையும் நிகழ்த்தப்பட்டது. (படங்கள் :-பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டம்

யாழ்.கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறும். இதில் அனைத்து சிரேஷ்ட பிரஜைகளையும் கலந்து கொள்ளுமாறு முதியோர் சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ)







அழகிய தங்க நகைகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்...

# நியூ உதயா ஜுவல்லர்ஸ்

தங்கமான உறவு இப்பொழுது
**புதிய பொலிவுடன்...**

**நியூ உதயாவின் மின்னி ஜொலிக்கும் தங்கத்தால் அக்ஷய திருதியையை வரவேற்போம்.**

தங்கம் வாங்கும் போது சகல ஐஸ்வரியங்களையும்
தரும் சுப தினமான அக்ஷய திருதியையில்
தேர்ந்தெடுக்க நவீன டிசைன்களிலான
ஆபரணங்களை எம் உறவுகளுக்கு

**நியூ உதயா**

ஏற்படுத்தியுள்ளது.

(C-8282)

**அத்தோடு குலுக்கல் முறையில்
தேர்ந்தெடுக்கப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு
தங்க நாணயங்கள் வழங்கப்படும்.
மற்றும் பெறுமதி மிக்க
பரிசில்களுடன்...**

உங்கள்
வாழ்க்கையின்
அழகான தருணங்கள்
எங்கள் தங்கத்தால்
மிளிரட்டும்.



**இல : 91, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 2031**

**No:91,
Power House Road,
Jaffna.
Tel: 021 222 2031**

**newuthayajwellrs@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACKME
WORLDWIDE EXPRESS



No.40A, Temple Road,
Jaffna.

Tel : 077 878 5477
021 222 8088

RATNA BALA
Director

www.ackmecouriers.com
ackme006@gmail.com

(C-8295)





யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய ஆங்கில டிப்ளோமா பிரிவு ஆரம்பம்.

# Diploma In English
புதிய பிரிவு ஆரம்பம்

06.04.2017 @ 10.00 A.M
(சனி / ஞாயிறு தினங்களில் காலை 10.00 - 12.30 மணி வரை இடம்பெறும்)
காலம் : 6 மாதங்கள்



E-CITY
COLLEGE OF ENGLISH
இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106 / 0770610271 / 0774924166
web: ecitycollege.lk

முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறை

(C-8402)



## வட இந்திய பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, யமுனோத்திரி காசி யாத்திரை

**நாட்கள் : 19 + 2 ஆரம்பம் : 12.04.2017 யாத்திரிகர்கள் : 20**
**செல்லுமிடங்கள் சுருக்கமான விபரம்**

டெல்லி சுற்றிப்பார்த்தல் (அட்ஷயதாம் உட்பட), ரிஷிகேஸ், கேதார் நாத் (சிவன் அர்த்தநாரீஸ்வரர் ஆன இடம்), கங்கோத்திரி, கங்கை உற்பத்தி ஆகுமிடம் கங்கா மாதா கோயில், ஜமுனோத்திரி ஆலயம், கேதாரநாதர் தரிசனம், மானா, சரஸ்வதி நதி உற்பத்தியாகுமிடம், டிம்பிற்கோட், ஹரித் துவார், சுற்றிப்பார்த்தல் 10 இடங்கள், பத்திரிநாத் 108 வைஸ்ணவ தலங் களில் முதன்மையானது, விஷ்ணு ஆலயம், மதுரா, கிருஷ்ண ஜென்மபூமி, ஆக்ரா, தாஜ்மஹால் பார்க்கலாம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், கயா, காலமானவர்களுக்கு பிதுர் கருமம் செய்யு மிடம், புத்தகயா, புத்தாலயங்கள், காசி (வாரணாசி), விஸ்வநாதர் சிவன் உட்பட 15 இடங்கள் தரிசிக்கலாம்.

காசியில் 3 நாட்கள் தங்கல், இராமேஸ்வரம், திருப்புலானி, உத்திரகோச மங்கை, நவபாஷாணம், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், சென்னை வருகை, ஒருநாள் சொப்பிங், மறுநாள் நாடு திரும்பல்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை.**

விமானப் பயணம் ( விமானரிக்கெட்) சுற்றிப்பார்க்க, இந்தியாவில் AC வாகன வசதி, மடப்பள்ளி ஆட்கள் சமையல், உடனுக்குடன் சமைத்த மூன் று வேளை உணவு, காப்பி ரீ, மினரல் வாட்டர், குடிநீர், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தை குளியலறை, (வெஸ்ரன் கொமட்) இணைந்த அறைகள், படகுக் கட்டணங்கள் உட்பட (மானுசாதேவி சண்டிதேவி மந்திர், இராமேஸ்வரம்) 21 தீர்த்தம் ஆடல், கட்டணம் 300 ரூபாய் வரை ஆகும். இது தங்கள் பொறுப்பு பாஸ்போட் போட்டோகொப்பி, படமுள்ள பக்கம் 1-1 சிறிய கலர் பாஸ்போட் சைஸ் படமும் அனுப்பி பதிவு செய்யவும்.

**மேலும் விபரம் தேவை எனில் கேட்டு அறியவும்.**

*இந்த ஆலய தரிசனம் : திருக்கைலாச மலைத் தரிசனத்திற்கு சமமானது (தவறவிடாதீர்கள்)*

## கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்

office : No 59, 3/6, Sea street, Colombo -11
Tel- 0777680102, 0777362154
Facebook :
sridevisriranganathanthuraiappa



# NORTH LANKA IIT
இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

## Master of Education (M.Ed.)
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

## B.Sc. in Physical Education And Sports
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

## Master of Business Administration (MBA)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

## Master of Public Administration (MPA)
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

Contact Persons:
Mr.Kanthaiya Sivaraja, Program Co-ordinator, NLIIT, Ph: 0775532402
Dr.Sithambaram Mohan, Human Resource Head, NLIIT, Ph: 0776030507

## B.Sc. in Computer Science
✓ UGC Approved ■ Duration: 3 Years ■ Entry Qualification: O/L or A/L

## B.Sc. in Computer Science (Top Up)
✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: 2 Years Diploma / HND

## M.Sc. in Computer Science
✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: Any Degree

விண்ணப்பக்கட்டணம்: Rs. 1000/-
விண்ணப்பக்கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவத்துடன் நேர்முகத்தேர்வுக்கு கீழ்கண்ட முகவரியில் சமூகமளிக்கவும்.
மேலும் [illegible] பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்.

North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna. Ph: 0767504535 / 0214927088


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு 20 கொள்கலன்கள், 25 கொள்கலன் தாங்கிகள் தேவை

## மாந்தை கிழக்கு பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி )

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு 20 கொள்கலன்கள் மற்றும் 25 கொள்கலன் தாங்கிகள்தேவையாக உள்ளதாகவும் இதனை பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் வழங்கி உதவுமாறு மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தழுவிய ரீதியில் நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக கிராமங்களில் உள்ள நீர் நிலைகள் வற்றி வருவதனால், பொது மக்களின் குடிநீர் கிணறுகள் உட்பட பாண்டியன் குளத்தில் குழாய் மூலம் வழங்கப்படும் நீர் வழங்கல் அதிகார சபையின் குடிநீர் விநியோகத்திற்காகப் பயன்படுத்தும் கிணற்று நீரும் வற்றி வருவதால் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்களின் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்குமான நீரைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் சிரமம் பல கிராமங்களில் ஏற்பட்டுள்ளது.

இதனால் எமது பிரதேச சபையின் மூலம் குடிநீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ. றமேஸ் எமது சபையின் பயன்பாட்டுக்கு உழவு இயந்திரங்களுடன் கூடிய 2 பௌசர் வண்டிகளை வழங்கி உதவியதுடன் ஒரு தொகுதி கொள்கலன்களையும் வழங்கியுள்ளார்.

இதன் மூலம் எமக்கு பௌசர் வண்டிகளின் பற்றாக்குறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தற்போது குடிநீர் விநியோகமானது பாலிநகர், அம்பாள்புரம், பாண்டியன் குளம், 50 வீட்டுத்திட்டம் போன்ற கிராமங்களில் உள்ள குடும்பங்களின் குடிநீர் தேவையென பிரதேச சபைக்கு கோரிக்கை கடிதத்தை வழங்கிய 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றோம்.

எமது பிரதேச சபையின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம் தேவையாயின் கோரிக்கை கடிதத்தை பிரதேச சபையில் கையளிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)




# மாமனிதர் தராகி சிவராம்; நினைவேந்தல் நிகழ்வு இன்று

மாமனிதர் தராகி சிவராமின் (தர்மரட்ணம் சிவராம்) 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இம் முறை கிளிநொச்சி நகரில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏ-9 வீதி கிளிநொச்சி பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நினைவேந்தல் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தெற்கு ஊடக அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் நினைவுரைகளாக "தராகியும் இலங்கையின் பூகோள அரசியலும்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட ஊடகக் கற்கை இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராம், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் சிவராம்" எனும் தலைப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், "சிவராமின் கனவு" எனும்தலைப்பில் "மூத்த ஊடகவியலாளர் ராதயனும், நானும் சிவராமும்" எனும் தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் மாணிக்கவாசகர் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

யாழ். ஊடக அமையம் இவ்வாண்டு முதல் வழங்குவதற்கு தீர்மானித்திருக்கும் தராகி சிவராம் ஞாபகார்த்த விருது மறைந்த கேலிச்சித்திரக் கலைஞரும் ஊடகவியலாளருமான அஸ்வின் சுதர்சனுக்கு வழங்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கில் நெருக்கடியான சூழலில் பணியாற்றிய ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் வகையில் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் விருது வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களும் இந் நிகழ்வின் போது கௌரவிக்கப்படவுள்ளனர். (2-5)

# சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அதிக நிதியொதுக்கீடு

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அதிக நிதியை ஒதுக்கீடு செய்த வடக்கு சுகாதார அமைச்சர் 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் அதிகளவிலான நிதியை சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ளார் என வடக்கு சுகாதார அமைச்சர் டாக்டர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மாகாண சுகாதார அமைச்சரின் ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மாகாண சபை உறுப்பினர்களுக்கான 2017 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் 2.6 மில்லியன் ரூபா சமூக உட்கட்டுமான அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் குறிப்பாக பாடசாலைகளுக்கு சுத்தமான வடிகட்டிய குடிநீர் வழங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 1.6 மில்லியன் ரூபாவும்; நலிவடைந்த குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளுக்காக ரூபா 9 இலட்சமும் விவசாய அபிவிருத்திக்காக 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், மதவழிபாட்டுத் தலங்களின் அபிவிருத்திக்காகவும், விளையாட்டுக்கழகங்களின் அபிவிருத்திக்காகவும் ரூபா 7 இலட்சம் அடங்கலாக மொத்தம் 6 மில்லியன் ரூபா இம்முறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5)

# தொழிலாளர்கள், விவசாயிகளை இணைத்து செட்டிக்குளத்தில் மேதினக்கூட்டமும் பேரணியும்

(குருமன்காடு)

வவுனியா நகருக்குள் நடத்தப்பட்டு வந்த மேதினக் கூட்டம் இம்முறை தொழிலாளர்கள், விவசாயிகளை இணைத்து வவுனியா செட்டிகுளப் பிரதேசத்திலுள்ள வீரபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வீரபுரம் பிள்ளையார் ஆலயத்திலிருந்து நாளை மறுதினம் காலை 9 மணிக்கு மேதினப்பேரணி ஆரம்பமாகும். பேரணி வீரபுரம் விளையாட்டு மைதானத்தை அடையும். தொடர்ந்து பொதுக் கூட்டம் நடைபெறும் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் மேதினம் குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், செட்டிகுள பிரதேச கட்சியின் ஆதரவாளர்கள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

மேதினம் என்பது இன்று முதலாளிகளால் கொண்டாடப்படும் கேளிக்கை விழாவாக மாறியுள்ளது. கிராமங்களில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள், சிற்றூழியர்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து உண்மையான மேதினமாக செட்டிகுளம் வீரபுரத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நினைவுகூர உள்ளது.

போர்ச்சூழலை உலகமே எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளை வழங்குவதைத் தவிர்ப்பதற்கு உலகின் ஒட்டுமொத்த ஆளும்வர்க்கத்துடன் கைகோர்த்து நிற்கும் அரசுக்கு எதிராக உழைக்கும் மக்கள் அனைவரும் இம் மேதினத்தில் அணிதிரண்டு எமது அறைகூவலை உலகுக்கு உரத்துச் சொல்வோம் வாரீர் எனத் தெரிவித்துள்ளார். (2-5-250)

# முருகனூர் விவசாயப் பண்ணையில் அன்னாசி அறுவடை விழா





(குருமன்காடு)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதியுதவியில் வவுனியா விவசாய திணைக்களத்தின் முருகனூர் பண்ணையில் செய்கை பண்ணப்பட்ட அன்னாசி அறுவடை விழா நேற்று இடம்பெற்றது.

வவுனியா, முருகனூர் விவசாயப் பண்ணையில் செய்கை பண்ணப்பட்டுள்ள தென்னைப் பயிர்ச்செய்கைக்குள் ஊடுபயிராக அன்னாசிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதற்குள் 75 அன்னாசிச் செய்கையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு செய்கை மேற்கொள்ள வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மூலம் விவசாய திணைக்களத்தால் மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இவ் அன்னாசிப்பழம் அறுவடை செய்யப்பட்டு கிலோ ஒன்று 150 ரூபாய்க்கு விற்பனை செய்யும் நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் அறுவடை விழாவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், இ.இந்திரராசா, செ.மயூரன், ம.ஜெயதிலக, மாவட்ட விவசாய பணிப்பாளர், விவசாய கல்லூரி அதிபர், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், [illegible] கலந்து கொண்டிருந்தனர். (2-5-250)

# 52 நாட்களைக் கடந்தும் தீர்வின்றி வீதியோரத்தில் போராடும் அவலம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து போராடிவருகின்ற காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி நேற்று 52 ஆவது நாளாக இந்த வீதி ஓரத்தில் போராடி வருகின்றனர்.

ஆனால் இந்த அரசாங்கமானது எமக்கு எந்தவித தீர்வுகளையும் முன்வைக்காத நிலையில் தொடர்ந்தது போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது

நேற்று முன்தினம் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்ட மக்கள் ஜனாதிபதி, பிரதமர் எதிர்க்கட்சித்தலைவர், வடக்கு மாகான முதலமைச்சர், மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு, தமக்கு விரைவில் தீர்வை வழங்குமாறு கோரி மகஜர்களை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-5-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரத்து 979 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல்வேறு தேவைகளுடன் வாழ்கின்றனர்

## உதவிட விரும்புவோர் வவுனியா மாவட்ட செயலகத்துடன் தொடர்புகொள்க

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடைபெற்று முடிந்த யுத்தம் காரணமாக வாழ்க்கைத் துணைவரை இழந்த நிலையில் 994 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் மற்றும் ஏனைய வழிகளால் தமது வாழ்க் கைத் துணையை இழந்த நிலையில் 4ஆயிரத்து 985, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுமாக மொத்தம் 5 ஆயிரத்து 979 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பொருளாதார ரீதியாக தொழில் முயற்சிகள் இன்றியும் வாழ்ந்து வருவதாக வவுனியா மாவட்டச் செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வவுனியா நகரப் பகுதி பிரதேச செயலக பிரிவில் அதி கூடிய பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இங்கு யுத்த சூழ்நிலைகளால் 385 குடும்பங்களும் மற்றும் ஏனைய வழிகளால் பாதிக்கப்பட்ட நிலையில் 3 ஆயிரத்து 219 குடும்பங்களுமாக மொத்தம் 3ஆயிரத்து 604 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் யுத்தம் காரணமாக 282 குடும்பங்களும் ஏனைய காரணங்களால் பாதிக்கப்பட்ட நிலையில் 690 குடும்பங்களுமாக மொத்தம் 972 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வவுனியா தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் யுத்தம் காரணமாக 10 குடும்பங்களும் மற்றும் ஏனைய வழிகளால் பாதிக்கப்பட்ட நிலையில் 772 குடும்பங்களுமாக மொத்தம் 782 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் யுத்தம் காரணமாக 317 குடும்பங்களும் மற்றும் ஏனைய வழிகளால் பாதிக்கப்பட்ட நிலையில் 304 குடும்பங்களுமாக மொத்தம் 621 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு வாழ்ந்து வரும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்கான தொழில் முயற்சிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்டுள்ள இந்த குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை வளம்பெற வழங்கப்பட்ட உதவித் திட்டங்கள் போதியளவு ஒரு தொகுதியினருக்கு மட்டுமே கிடைத்துள்ளது. அநேகம் பேருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிட விரும்புவோர் வவுனியா மாவட்ட செயலகத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு தகவல்களை பெற்று எமது செயலக உத்தியோகத்தர்களின் உதவியுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமே நேரடியாக உதவித் திட்டங்களை கையளிக்குமாறு அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)




## சிறுமியின் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு விளக்கமறியல்

பளைப்பகுதியில் உள்ள தனது வீட்டில் வைத்து சிறுமிகள் மூவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிற்கு தொடர்ந்தும் சிறையில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்க மன்று அனுமதி வழங்கியதுடன் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிவரையும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி பளைப் பகுதியில் உள்ள தனது வீட்டில் வைத்து சிறுமிகள் மூவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பதிவாளர், பொலிஸார், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கொண்ட குழுவினர் மன்றின் பணிப்பின் பெயரில் பளைப்பகுதியில் உள்ள குறித்த வீட்டினை நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் சில சான்றுப் பொருட்களையும் மீட்டுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து கடந்த 21ஆம் திகதி குறித்த வழக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த சம்பவத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்க பொலிஸாரால் விண்ணப்பம் செய்யப்பட்டதை தொடர்ந்து அதனை மன்று அனுமதிக்க கடந்த 24ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த வழக்கை கையில் எடுத்தனர்.

24ஆம் திகதியில் இருந்து சிறையில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் எடுக்கப்பட்டது. இதன்போதே கைது செய்யப்பட்ட சந்தேக நபரிற்கு தொடர்ந்தும் சிறையில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்க மன்று அனுமதி வழங்கியதுடன் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிவரையும் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பளைப்பகுதியில் அவரது வீட்டில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கருவிகள் நேற்று முன்தினம் பொலிஸாரால் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-5-15-312)

## பாதுகாப்பான புகையிரதக்கடவையை அமைத்துத் தருமாறு வேண்டுகோள்

(குருமன்காடு)

வரலாற்று சிறப்பு மிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்திற்கு செல்லும் பாதையில் புகையிரதக் கடவை உள்ளதால் அதற்குரிய பாதுகாப்பு கடவையை அமைத்துத்தருமாறு வவுனியா புகையிரத அதிபரிடம் ஆலய பரிபாலன சபைத் தலைவர் க. கிருபாகரன் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் தெரிய வருவதாவது.

வரலாற்று சிறப்பு மிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் எதிர்வரும் ஜூன் மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளதால் இக்காலத்தில் பெருமளவான அடியார்களும் வாகனங்களும் இவ்வாலயத்திற்கு செல்வது வழக்கம். இதனால் புதூர் ஆலயத்திற்கு செல்லும் பாதையில் புகையிரதக் கடவை உள்ளதால் அதற்குரிய பாதுகாப்பு கடவையை அமைத்து தருமாறு வவுனியா புகையிரத அதிபரிடம் ஆலய பரிபாலன சபை தலைவர் க.கிருபாகரன் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, இங்கு சமிக்ஞை விளக்கு மட்டுமே உள்ளது. அத்துடன் இப்பகுதி பற்றைக்காடுகளால் மூடப்பட்டுள்ளதால் புகையிரதம் வருவது தெரிவதில்லை. எனவே இவ்வீதியில் பாதுகாப்பு கடவையினை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (2-5-250)

## கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் 68ஆவது நாளாகவும் தொடர்கிறது




கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 68ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த பெப்ரவரி மாதம் காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டமே இரவு பகலாக தொடர்கிறது. (2-5-312)

# அரிசி வகைகளின் கட்டுப்பாட்டு விலைகள் அறிவிப்பு

இலங்கை பாவனையாளர் அதிகார சபையின் வவுனியா, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களுக்கான பாவனையாளர் அதிகார சபையின் அலுவலகத்தினால் பொது மக்களினதும் மற்றும் வர்த்தகர்களின் நலன் கருதி விற்பனை செய்யப்படும் அரிசி வகைகளின் கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பான விலை விபரங்களை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அண்மை நாட்களாக வடக்கு மாகாணத்திற்குட்பட்ட மாவட்டங்களில் உள்ள சில வர்த்தக நிலையங்களில், அரிசி வகைகளின் விலைகளை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக நுகர்வோரினால் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து எமது அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பாவனையாளர் அதிகார சபையானது அரிசி வகைகளின் ஆக்கக்கூடிய சில்லறை விலைகளின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இந்த விலை விபரங்களுக்கு மேலாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது வியாபாரிகள் எவரும் விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்கு கோரவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாது என அறிவுறுத்தப்படுகின்றது.

இதனடிப்படையில், சம்பா அரிசி (கீரி சம்பா, சூதுரு சம்பா தவிர்ந்தவை) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது. கிலோ ஒன்று 90 ரூபாவும், இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசி கிலோ ஒன்று 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும்.

நாட்டு அரிசி, உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டது. கிலோ ஒன்று 80 ரூபாவும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கிலோ ஒன்று 72 ரூபாவுமாக விற்பனை செய்யப்பட வேண்டும்.

நாட்டுப் பச்சை அரிசி, உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டது. கிலோ ஒன்று 78, ரூபாவும், இறக்குமதி செய்யப்பட்டது கிலோ ஒன்று 70 ரூபாவுமாக விற்பனை செய்யப்பட வேண்டும். இந்த விலை விபரமானது நடப்பாண்டின் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் உள்ளது.

இவ் விலைகளை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, முதலாம், இரண்டாம் மாடிகள், சர்வதேச செயலகக் கட்டடம், த.பெ. இல. 1581, 27, வொக்சோல் வீதி, கொழும்பு -02 என்ற அலுவலக முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அறிவிக்க வேண்டும்.

தொலைபேசி மூலமாக தகவல்களை வழங்குவதாயின் வவுனியா-024 - 775 5455, முல்லைத்தீவு - 021 - 229 0134, மன்னார் - 023 775 5455, கிளிநொச்சி - 021 -775 5456, யாழ்ப்பாணம் - 021 -775 5455 ஆகிய இலக்கங்கள் ஊடாக வழங்க முடியும்.

இதனை விட நேரடியாக பாவனையாளர் அதிகார சபையின் தலைமைச் செயலகத்தின் முறைப்பாட்டுப் பிரிவின் 011 775 5481 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது 011 - 232 1696 என்ற தொலைநகல் (பக்ஸ்) மூலமாகவோ தகவல்களை நுகர்வோர் வழங்கியவுடன் துரிதமாக நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் அலுவலகத் தகவலில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இரட்டை இலை' விவகாரம் தினகரனிடம் தீவிர விசாரணை



(சென்னை)

முடக்கப்பட்ட "இரட்டை இலை" சின்னத்தைப் பெற தேர்தல் ஆணையத்திற்கு ரூ.60 கோடி இலஞ்சம் பேர வழக்கில் கைது செய்யப்பட்ட டி.டி.வி.தின்கரனிடம் டில்லி பொலிஸார் 2 ஆவது நாளாக நேற்றும் விசாரணை நடத்தினர்.

அ.தி.மு.க. அம்மா அணியின் துணை பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரனை இரட்டை இலை சின்னத்தை பெறுவது தொடர்பாக இலஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் டில்லி பொலிஸார் கைது செய்தனர். 5 நாட்கள் பொலிஸ் காவலில் எடுத்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக டில்லியில் இருந்து நேற்று முன்தினம் சென்னை கொண்டு வரப்பட்ட டி.டி.வி. தினகரன், சென்னை பெசன்ட் நகரில் இருக்கக்கூடிய ராஜாஜி பவன் அரசு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று முன்தினம் 4 மணி நேரத்திற்கு மேலாக அங்கு விசாரணை நடத்தி வந்தனர். அதற்கு பின்பு அங்கு அருகாமையில் இருக்கக்கூடிய டி.டி.வி. தினகரன் இல்லத்திற்கு கொண்டு சென்று 6 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடத்தினர். தினகரனுடன் அவரது நண்பர் மல்லிகார்ஜுனா இல்லம் மற்றும் டி.டி.வி.தினகரனுடைய அலுவலகம் ஆகிய இடங்களுக்கு கொண்டு சென்று பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர். டி.டி.வி.தினகரன் இருக்கக் கூடிய ராஜாஜி பவனில் 2 ஆவது நாளாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் அவரின் இல்லம் மற்றும் அலுவலகங்களுக்கு அழைத்துச் சென்று விசாரணையை தீவிரப்படுத்தவுள்ளனர்.

அதற்காக அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. டி.டி.வி. தினகரனை பொறுத்தவரை அவருக்கு ஆதரவான தொண்டர்கள் தொடர்ச்சியாக அங்கு வந்து சில நேரங்களில் வாக்குவாதத்தில் ஈடுபடுவதும், சட்டத்தரணிகள் வருவதும் வழக்கமாக இருப்பதால் உள்ளே செல்வதற்காக யாரையும் அனுமதிக்கப்படுவதில்லை. அதற்கான ஏற்பாடுகளையும் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

ரூ.1.3 கோடி அளவிலான ரூ.2,000 பணம் எப்படி கிடைத்தது, பணப்பரிவர்த்தனைகள் யாரு மூலமாக நடைபெற்றது போன்ற கேள்விகளையும், சென்னை, பெங்களூர், கேரளா உள்ளிட்ட இடங்களில் இதற்கு தொடர்புடைய தொழிலதிபர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், அமைச்சர்கள், வங்கி அதிகாரிகள் போன்ற யாருடையதேனும் தொடர்பு இருக்கிறதா? என்று பல கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டு வருவதால் மேலும் டி.டி.வீ. தினகரனுக்கு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

ராஜாஜி பவனில் விசாரணை நடத்திய பிறகு டி.டி.வி.தினகரனை கேரளா கொண்டு செல்ல வாய்ப்பு இருப்பதாக தெரிய வந்துள்ளது. (இ-3)

பாரதச் செய்தி

# இரு அணிகள் இடையே இரகசிய பேச்சு இல்லை

## அமைச்சர்கள் திட்டவட்டம்

(சென்னை)

இரு அணிகள் இடையேயான ஒற்றுமையைத்தான் தொண்டர்கள் வலியுறுத்துகிறார்கள் என்றும், இரு அணிகள் இடையே இரகசிய பேச்சு வார்த்தை எதுவும் நடக்கவில்லை என்றும் அமைச்சர்கள் திட்டவட்டமாக தெரிவித்தனர்.

அ.தி.மு.க. (அம்மா) அணி மாவட்ட செயலாளர்கள் ராயப்பேட்டை தலைமை கழகத்தில் 3 நாட்கள் நடக்கும் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்திருந்தார்.

அதன்படி, கடந்த 25ஆம் திகதி தென் மாவட்டங்களை உள்ளடக்கிய 16 மாவட்ட செயலாளர்களும் 26 ஆம் திகதி ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் உட்பட 17 மாவட்ட செயலாளர்களும் கலந்துகொண்டனர். இந்த நிலையில் வடசென்னை, தென் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம் உட்பட 17 மாவட்ட செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் அ.தி.மு.க. (அம்மா) அணி தலைமை கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமை தாங்கினார். இதில் பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை, வைத்திலிங்கம் எம்.பி., அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார், தங்கமணி, உதயகுமார், ஓஎஸ் மணியன், கடம்பூர் ராஜு, எஸ்.பி.வேலுமணி உட்பட முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் தேர்தல் ஆணையத்தில் கொடுக்கப்பட இருக்கும் பிரமாண பத்திரத்தில் செய்ய வேண்டிய திருத்தங்கள், அதற்கான நடவடிக்கைகள் குறித்து மாவட்ட செயலாளர்களிடையே விரிவாக பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் எம்.ஜி.ஆர்.நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நிகழ்ச்சி ஏற்பாடுகள் குறித்தும் மே 1 ஆம் திகதி தொழிலாளர் தினத்தையொட்டி நடத்த வேண்டிய நிகழ்வுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

முற்பகல் 11.10 மணிக்கு தொடங்கிய மாவட்ட செயலாளர்கள் கூட்டம் பிற்பகல் 12.10 மணிக்கு முடிவடைந்தது.

பின்பு வெளியே வந்த அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு.

கேள்வி:- மாவட்ட செயலாளர்களிடம் எது தொடர்பான ஆலோசனை நடைபெற்றது?

பதில்:- தொழிலாளர் தின நாளில் எழுச்சியுடன் கூட்டம் நடத்துவது தொடர்பாகவும் எம்.ஜி.ஆர்.நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் குறித்தும் மாவட்ட செயலாளர்களுக்கு முதலமைச்சர் அறிவுரை வழங்கினார்.

கேள்வி:- இரு அணிகள் இணைவது தொடர்பாக மாவட்ட செயலாளர்களிடையே கருத்து கேட்கப்பட்டதா? அதற்கு அவர்கள் என்ன பதில் சொல்லி இருக்கிறார்கள்?

பதில்:- ஏற்கனவே எங்கள் குழு கூறியது போல இரு அணிகள் இடையேயான பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஜெயலலிதா வழியில் அரசு நடக்க வேண்டும் என்று மாவட்ட செயலாளர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

கேள்வி:- இரகசிய பேச்சு வார்த்தை நடந்ததாக பேசப்படுகிறதே?

பதில்:- அப்படி எல்லாம் எதுவும் நடக்கவில்லை. பேச்சுவார்த்தை என்பது இரு தரப்பும் அமர்ந்து வெளிப்படையாகத்தான் நடக்கும்.

கேள்வி:- பேச்சுவார்த்தை நடத்துவதில் இரு அணிகள் இடையே தயக்கம் ஏன்?

பதில்:- அவர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இவ்வாறு அவர் பதிலளித்தார்.

இதையடுத்து வெளியே வந்த அமைச்சர் உதயகுமார் நிருபர்களிடம் கூறும்போது, 'ஒற்றுமைக்கான அனைத்து நடவடிக்கைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மூத்த அமைச்சர்கள் வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தையில் இழுபறி என்ற பேச்சுக்கே இடமில்லை. ஜெயலலிதா ஆசியோடு எல்லாம் நன்றாக நடக்கும். இரு அணிகளின் ஒற்றுமையைத் தான் மாவட்ட செயலாளர்களும் தொண்டர்களும் வலியுறுத்துகிறார்கள்' என்றார்.

அதைத்தொடர்ந்து அமைச்சர் சி.வி.சண்முகம் நிருபர்களிடம் கூறுகையில், 'மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தேர்தல் ஆணையத்தில் கொடுக்க வேண்டிய பிரமாணப் பத்திரத்தின் நிலவரம், எப்படி செயற்பட வேண்டும் என்பது பற்றியும் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை எப்படிக் கொண்டாடுவது பற்றியும் விவாதிக்கப்பட்டது. அ.தி.மு.க.தொண்டர்கள் இரு அணிகள் இணைய வேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்கள் விருப்பத்துக்கு ஏற்ப பேச்சுவார்த்தைக்கு நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# டி.டி.வி.தினகரனைக் காப்பாற்ற எந்த விலையும் கொடுக்கத் தயார்




டி.டி.வி.தினகரனைக் காப்பாற்ற எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று தினகரன் ஆதரவாளர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று சென்னை அடையாறில் நாஞ்சில் சம்பத் செய்தியாளர்களிடம் கூறுகையில், "எங்கள் பக்கம் 87 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் இருந்த கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலாவின் புகைப்படங்களை அகற்றியிருப்பது சரித்திர அநீதி. கடந்த 33 ஆண்டு காலம் சுகங்களுக்கு அடிமைப்படாத சூரியப் பந்தாய், ஆசா பாசங்கள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, எம்.ஜி.ஆருக்குப் பிறகு இந்த இயக்கத்தை காப்பாற்றுவதற்கான சுமையை முதல்வர் ஜெயலலிதா தனது தோளில் ஏற்றுக் கொண்ட போது அந்தச் சுமையை பகிர்ந்து கொண்டவர் சசிகலா.

விமர்சனங்கள் ஆயிரம் வைக்கலாம். ஆனால் சசிகலா அந்தக் கடமையை வெற்றிகரமாக செய்தார். முதல்வர் ஜெயலலிதாவே, சசிகலா எனக்கு இன்னொரு தாய் என்று ஒரு பேட்டியில் சொன்னார், சசிகலாவால் பதவி பெற்றவர்கள்தான் அவரது படத்தை கீழே இறக்கியுள்ளனர். 123 சட்டமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்தவர் டி.டி.வி.தினகரன்தான்.

டி.டி.வி.தினகரனிடம் ஏற்கனவே 37 மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டுவிட்டது. இன்னும் விசாரிக்க என்ன இருக்கிறது? இருப்பினும், டில்லி பொலிஸாரின் விசாரணைக்கு இடையூறாக இருக்கமாட்டோம். டி.டி.வி. தினகரனைக் காப்பாற்ற எந்த விலையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரின் கண் அசைவு இல்லாமல், அவரது கையெழுத்து இல்லாமல் இந்தக் கட்சியில் எதையும் செய்ய முடியாது. துணைப் பொதுச் செயலாளர் தினகரன் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது. அவரை அரசியலில் இருந்து வெளியேற்ற முயற்சி நடக்கிறது. அவரிடம் நடத்தப்படும் விசாரணை ஒரு நாடகம். டில்லிதான் இந்த நாடகத்தை நடத்துகிறது. அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைந்தால் மகிழ்ச்சிதான்" என்றார் நாஞ்சில் சம்பத். (இ-3)

# ஏழைகளிடம் கொள்ளையடித்தவர்களை தப்பவிட மாட்டோம்; பிரதமர் மோடி உறுதி





(சிம்லா)

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும், ஏழைகளிடம் கொள்ளையடித்தவர்களை தப்பவிட மாட்டோம் என்று பிரதமர் மோடி உறுதிபடத் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி, நேற்று முன்தினம் இமாசல பிரதேச மாநில தலைநகர் சிம்லாவுக்கு சென்றார்.

அங்கு நடைபெற்ற பாஜனதா பொதுக் கூட்டத்தில் அவர் தெரிவிக்கையில்,

சிம்லாவில் எனது இளமைக் காலத்தை கழித்து இருக்கிறேன். குறிப்பாக, இங்குள்ள இந்தியன் கோபி ஹவுசில் என்னுடைய பத்திரிகை நண்பர்களுடன் பொழுதை கழித்துள்ளேன். அப்போதெல்லாம் நான் குடிக்கும் கோபிக்கு நான் காசு கொடுத்ததே இல்லை. எனது பத்திரிகை நண்பர்களே கொடுத்து விடுவார்கள்.

இந்த மாநிலம், தேவ பூமி, வீர பூமி, சுற்றுலா தலங்கள் நிறைந்த பூமி. இங்கு சாலைகள், ரெயில்வே, விமான வழித்தடம் போன்ற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

குளிர்பானத்தில் பழரசத்தை கலக்குமாறு பன்னாட்டு குளிர்பான நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இதனால், இங்குள்ள பழ விவசாயிகள் பலன் அடைவார்கள்.

காலம் மாறிவிட்டது. உத்தரபிரதேசம், உத்தரகாண்ட் மாநிலங்களில் அடித்த காற்று, இமாசலபிரதேசத்தில் நுழைந்து விட்டது. டில்லியில் இருந்தும் புதிய காற்று வீசி வருகிறது. எனவே, இமாசல பிரதேசம் நேர்மையான சகாப்தத்துக்கு தயாராகி வருகிறது.

ஒரு முதலமைச்சர் (வீர பத்ரசிங்), வழக்குகளுக்காக தன்னுடைய சட்டத்தரணிகளுடன் பெரும்பாலான நேரத்தை செலவழித்து வருகிறார். அவரால் மக்களுக்கு எப்படி பாடுபட முடியும்? அவரது பெயர் உங்களுக்கே தெரியும்.

ஊழலை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து எடுப்போம். ஏழைகளிடம் கொள்ளையடித்தவர்களை தப்பவிட மாட்டோம்.

அதற்காக, ரொக்கப் பணத்தை குறைவாக பயன்படுத்தி, மின்னணு பணப் பரிமாற்றத்தை பின்பற்றுமாறு வலியுறுத்தி வருகிறோம்.

இவ் வாறு பிரதமர் மோடி பேசினார்.

முன்னதாக நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், சிம்லா-டில்லி இடையிலான மலிவு கட்டண விமான சேவையை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

கடப்பா-ஐதராபாத், நேன்டட்- ஐதராபாத்வழித்தடங்களிலும் மலிவுக்கட்டணவிமானசேவையை காணொலி காட்சி மூலம் தொடங்கிவைத்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் இட்லிப் மாகாணத்தில் வைத்தியசாலைகள் மீது தாக்குதல்





கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள இட்லிப் மாகாணத்தில் இரு வைத்தியசாலைகள் மீது ஜெட் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் எட்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற குண்டு தாக்குதல்களானது ரஷ்யா அல்லது சிரிய படையினரால் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இட்லிப் மாகாணத்தின் தெற்கு பகுதியிலுள்ள டீர் அல் ஷார்கி (Deir al Sharqi) கிராமத்திலுள்ள வைத்தியசாலையை இலக்கு வைத்து நடத்தப்பட்ட முதல் தாக்குதலில் சுமார் மூன்று பேர் உயிரிழந்ததுடன், பலர் படுகாயமடைந்ததாக மீட்பு பணியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மார் ஸிடா (Maar Zita) கிராமத்தில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதலில் சுமார் ஐவர் உயிரிழந்துள்ளதாக மருத்துவ உதவியாளர்கள் தெரிவித்தனர்.

வடமேற்கு சிரியாவில் மருத்துவ நிலையங்களை இலக்குவைத்து தொடர்ந்து தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், வைத்தியசாலைகள் மீது தாம் தாக்குதல் நடத்தவில்லை என சிரிய ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத் தொடர்ந்தும் மறுப்பு தெரிவித்து வருகின்றார்.

இதேவேளை, பஷர் அல்-ஆசாத்திற்கு ஆதரவாக கடந்த 2015ஆம் ஆண்டு முதல் மோதலில் இணைந்துள்ள ரஷ்யாவும் பொது உட்கட்டமைப்புகளை இலக்கு வைக்கவில்லை என தம் மீதான குற்றச்சாட்டை நிராகரித்துள்ளன. (இ-3)

# வடகொரியாவுடன் கடும் மோதலுக்கு சாத்தியமுள்ளதாம்

## ட்ரம்ப் தகவல்



வட கொரியாவின் அணு சக்தி மற்றும் ஏவுகணை சோதனை திட்டங்களுக்கு எதிராக அமெரிக்காவிற்கும் வட கொரியாவிற்கும் இடையே கடும் மோதல் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகின்ற போதிலும், இந்த சர்ச்சைக்கு இராஜதந்திர ரீதியான தீர்வையே தான் விரும்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்க ஜனாதிபதிகளின் நிம்மதியை கெடுத்த இந்த நெருக்கடிக்கு அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும் என்றே விரும்புகிறேன்.

அதன்படி இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இராணுவத்தை உள்வாங்குவதற்கு முன்னர், வடகொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதன் மூலம் எமது அரசாங்கம் தீர்வை வலியுறுத்தி வருகிறது.

இப்பிரச்சினைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண்பதே எமது விருப்பமாக உள்ள போதிலும், அது மிகவும் கடினமானதாகும். வடகொரியா அமெரிக்காவிற்கு மிகப் பெரிய சவாலாக விளங்கி வருகிறது" என்றார்.

இதேவேளை, வடகொரியாவை கையாளும் சீனாவின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கு ட்ரம்ப் பாராட்டும் தெரிவித்துள்ளார். (இ-3)

## வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி

# ரஷ்யா விரும்பினால் சிரியாவில் அமைதியை ஏற்படுத்த முடியும்

## அமெரிக்கா சுட்டிக்காட்டு




சிரியாவில் நடந்துவரும் மோதலை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் அனைத்து மட்டத்திலும் ரஷ்யாவிற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதுவர் நிக்கி ஹாலே ஐ.நா. பாதுகாப்பு சபையை வலியுறுத்தியுள்ளார்.

மத்தியகிழக்கு பிரச்சினை தொடர்பிலான ஐ.நா. பாதுகாப்பு சபையின் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாதாந்த கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

"சிரியாவில் சுமார் ஆறு ஆண்டுகளாக நீடித்துவரும் உள்நாட்டு மோதலை ரஷ்யா எண்ணினால் முடிவுக்கு கொண்டுவரலாம். எனவே இவ்விடயம் தொடர்பில் ரஷ்யாவிற்கு அழுத்தம் கொடுப்பது அவசியமாகும்.

சிரியா மீதான எட்டு தீர்மானங்களை, ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்துள்ளது. சிரியா மீதான தீர்மானங்களை ரஷ்யர்கள் இவ்வாறு தொடர்ந்து தடுத்து வந்தால் அது பாரிய பிரச்சினைக்கு வழிவகுக்கும். எனவே இதற்கு தீர்வை காண்பதற்கு நாம் பாதுகாப்பு சபையை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறோம்" என்றார்.

எனினும், ரஷ்யா, ஈரான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மோதலை தடுக்கவும், மனிதாபிமான உதவிகளை வழங்குவதையும் உறுதிப்படுத்தவே செயற்பட்டு வருகிறது என அமெரிக்க தூதரின் கருத்திற்கு பதிலளித்த ஐ.நா.விற்கான ரஷ்ய துணை தூதுவர் தெரிவித்துள்ளார். (இ-3)

# அணு ஆயுதச் சோதனைகள் ஒருபோதும் நிறுத்தப்படாது

## வடகொரியா திட்டவட்டம்



இந்த நிலையில் வடகொரிய அரசின் மூத்த அதிகாரி சோல் வோன், சி.என்.என். தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார். இது ஒரு அபூர்வ நிகழ்வாக பார்க்கப்படுகிறது.

இந்த பேட்டியின்போது அவர், "வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகள் ஒருபோதும் நிறுத்தப்படாது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு மனோபாவம் தொடர்கிற வரை எங்களது அணு ஆயுத சோதனையும் தொடரும்" எனத்தெரிவித்தார்.



(பியாங் யாங்)

வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகள் ஒருபோதும் நிறுத்தப்படாது என வடகொரிய அரசின் மூத்த அதிகாரி சோல் வோன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தீர்மானத்தை மீறி வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளையும், ஏவுகணை சோதனைகளையும் நடத்தி வருகிறது.

இதற் காக அந்த நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகளை ஐ.நா. சபையும், அமெரிக்காவும் விதித்துள்ளன.

புதிதாக மேலும் பல பொருளாதார தடைகளை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க அமைச்சர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

வடகொரியாவுக்கு எதிராக கடினமான நிலைப்பாட்டை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எடுத்துள்ளார். இதன் காரணமாக கொரிய தீபகற்ப பகுதியில் போர் பதற்றம் நிலவி வருகிறது.

ஆனால் வடகொரியா கொஞ்சமும் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்வதாக இல்லை.

மேலும், "எங்கள் அணு ஆயுத பலத்தை வலுப்படுத்துவதற்கு, அணு ஆயுத சோதனை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று" என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# இரட்டை இலைக்கு லஞ்சம் மேலும் ஒரு தரகர் கைது

இரட்டை இலைக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் ஏற்கனவே தரகர் சுகேஷ், டி.டி.வி.தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜுனா ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது 4ஆவது நபராக ஹவாலா தரகர் நரேஷ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரட்டை இலை சின்னத்தை பெறுவதற்காக டி.டி.வி. தினகரன் லஞ்சம் கொடுத்த விவகாரத்தில் கடந்த 17ஆம் திகதி சுகேஷ் சந்திரசேகர் என்ற தரகர் டெல்லியில் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து விசாரணைக்காக டில்லி சென்ற தினகரன் கடந்த 25ஆம் திகதி நள்ளிரவில் கைது செய்யப்பட்டார்.

டி.டி.வி. தினகரனுக்கு நண்பர் மல்லிகார்ஜுனா மூலமாகவே சுகேசுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. இவரது ஏற்பாட்டின் பேரிலேயே இரட்டை இலை சின்னத்திற்கு லஞ்சம் கொடுத்தது அம்பலமானது.

இதனை தொடர்ந்து மல்லிகார்ஜுனாவும் கைது செய்யப்பட்டார். இருவரையும் காவலில் எடுத்த டில்லி பொலிஸார் அவர்களை சென்னைக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் மேலும் பலர் இடைத்தரகர்களாக செயற்பட்டு இருப்பது பொலிஸ் விசாரணையில் தெரிய வந்தது. அவர்களை டில்லி பொலிஸார் கண்காணித்து வந்தனர். நேற்று டில்லியில் மேலும் ஒரு ஹவாலா தரகர் பிடிபட்டார். அவரது பெயர் நரேஷ். டில்லியை சேர்ந்த இவர் தாய்லாந்தில் தலைமறைவாக இருந்தார். நேற்று அவர் டில்லி திரும்பியபோது டில்லி குற்றப்பிரிவு பொலிஸார் அவரை சுற்றி வளைத்து கைது செய்தனர். ஹவாலா முகவராக நரேஷ் செயற்பட்டுள்ளார். டி.டி.வி.தினகரனுடன் அவர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது விசாரணையில் தெரிய வந்தது. அவர் மூலமாகவே ரூ.10 கோடி பணத்தை சென்னையில் இருந்து கொச்சி வழியாக தினகரன் டில்லிக்கு கொண்டு சென்றிருப்பதும் தெரியவந்துள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச சொத்துக்களைத் தவறாக பயன்படுத்துவதைத் தவிருங்கள்

## ட்ரான்ஸ்பரன்ஷி கோரிக்கை

(கொழும்பு)

மே தினத்தை முன்னிட்டு சகல அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் பொதுச் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துவதை தவிர்த்து கொள்ளுமாறு ட்ரான்ஸ்பரன்ஷி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா (TISL) நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாரிய அளவிலான பேருந்துகள் மற்றும் புகையிரதம் உள்ளிட்ட பொது போக்குவரத்து சேவைகள் நாடளாவிய ரீதியில் மே தின ஊர்வலத்திற்கென ஆதரவாளர்களை குவிப்பதற்காக முற்கூட்டியே ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

அவ்வாறான எந்தவொரு பொதுச் சொத்துக்களையும் பயன்படுத்தலானது உரிய நடைமுறைகளுக்கு அமைவாகவும், அவ்வாறான சந்தர்ப்பங்கள் மேதின கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்கின்ற அரசியல் ஸ்தாபனங்களுக்கு மாத்திரமன்றி அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமைதல் வேண்டும்.

1982 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பொதுச் சொத்துக்கள் சட்டத்திற்கு எதிரான குற்றங்களை ஏற்பாட்டாளர்கள் புரிந்துகொண்டு இயங்க வேண்டுமென ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா தெரிவிக்கின்றது.

இதேவேளை இந்த முறை கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் 15 மே தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் மே தின நிகழ்வு கெம்பல் மைதானத்திலும், கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் 7 அரசியல் கட்சிகள் பங்கேற்கும் மே தின நிகழ்வு காலி முகத் திடலிலும் இடம்பெறவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் மே தின நிகழ்வுகள் பீ.ஆர்.சீ. மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இது தவிர ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மே தின நிகழ்வுகள் கண்டி, கெடம்பே மைதானத்தில் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புத்தர் சிலையை எதிர்த்து அம்பாறையில் முஸ்லிம்கள் நேற்று ஆர்ப்பாட்டப்பேரணி



(கொழும்பு)

இறக்காமம், மாணிக்கமடு மாயக்கல்லி மலைப் பகுதியில் சட்ட விரோதமாக புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளதைக் கண்டித்தும் அங்கு விகாரை அமைப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்ட பேரணிகள் நடைபெற்றன.

கல்முனை, சாய்ந்த மருது, மருதமுனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, இறக்காமம் உள்ளிட்ட பல முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்ட பேரணிகளில் அரசியல் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

(இ-7)

# நீதிமன்ற உத்தரவை கிழித்தெறிந்த பட்டதாரிகளுக்கு அழைப்பாணை

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்குமாறு, திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு பிரதியை கிழித்தெறிந்து, தகாத வார்த்தைகளை பயன்படுத்திய திருகோணமலை மாவட்ட பட்டதாரிகளை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் 76 ஆவது அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போது, மாகாண சபைக்கு முன்பு பிரதான வீதியை வழிமறித்து கடந்த 25 ஆம் திகதி வேலையற்ற பட்டதாரிகள் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த விடயம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து, போராட்டத்தை அமைதியான முறையில் முன்னெடுக்குமாறு திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா இடைக்கால உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இந்த இடைக்கால உத்தரவின் பிரதியை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த, அகில இலங்கை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் தென்னே ஞானானந்த தேரர் கிழித்தெறிந்து காலால் மிதித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலே, குறித்த நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (இ-7)


## மணமக்கள் தேவை

* 1986ஆம் ஆண்டு பிறந்த படித்த மணமக்கள் தேவை. 1987ஆம் ஆண்டு பிறந்த விவாகரத்து செய்த மணமக்கள் தேவை. (8861)

செ.ஜெயக்குமார்
தொடர்புகளுக்கு:077 835 5485, 076 725 0144, 021 491 9370


# சரத் பொன்சேகாவை மீள ராணுவத் தளபதியாக்கும் செய்தி நகைச்சுவையானது

## அமைச்சர் எஸ்.பி. கூறுகிறார்

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் தலைமையின் கீழ் விசேட படையணியொன்றை அமைப்பது தொடர்பில் அமைச்சரவையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட கருத்தை ஒரு நகைச்சுவையாகவே நான் பார்க்கின்றேன் என சமூக நலத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து, சரத் பொன்சேகாவிடம் மீண்டும் இராணுவத் தளபதியாகத் தயாரா? என வினவினார். எனக்கென்றால் இதற்கு அப்பால் எதுவும் எதிர்பார்த்ததாக தெரியவில்லை. நான் இதனை அவ்வளவு பெரிய ஒரு விடயமாக கருத்தில் கொள்ளவும் இல்லை.

பொன்சேகாவுக்கு இராணுவத்தை மீண்டும் கொடுத்தால், இராணுவம் தற்போது இருப்பதை விடவும் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கும். இதற்கு ஏன்? குழப்பமடைகின்றனர் எனவும் அமைச்சர் மேலும் கேள்வி எழுப்பினார். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷவின் வாக்குறுதிகள் மல்வானையிலா? மெதமுல்லயிலா?

## ஐ.தே.க.எம்.பி.விஜயபால கேள்வி



மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் கொடுத்த வாக்குறுதிகள் எங்கே? மல்வானை மாளிகையிலா? அல்லது மெதமுல்லயிலா? என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

எமது ஆட்சி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடங்களும் 8 மாதங்களுமே கடந்துள்ளன. இன்னும் மூன்று ஆண்டுகள் எங்களுக்கு இருக்கின்றன. ஆனால் அதற்குள் ஆட்சியை கவிழ்ப்பதற்கு மகிந்த அணியினர் முற்படுவதாக குற்றம் சுமத்தினார்.

மேலும் கடந்த காலங்களில் அடக்குமுறைகள் காணப்பட்டன. உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதற்கு சிறந்த உதாரணமாக ரதுபஸ்வெல சம்பவத்தை குறிப்பிடலாம். குடிநீருக்காக போராடியவர்கள் மீது கடந்த அரசாங்கம் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் இளைஞர்கள் உயிரிழந்ததை சுட்டிக்காட்டினார்.

மேலும் மகிந்த அணியினர் முன்னெடுக்க இருக்கும் மேதினக்கூட்டமானது மக்களை மேலும் ஏமாற்றும் செயற்றிட்டம் எனவும் தெரிவித்தார்.

பணம் மற்றும் உணவை கொடுத்து தமது கூட்டத்திற்கு மக்கள் ஆதரவை திரட்டுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி மகிந்த மீது குற்றம் சாட்டினார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L சொந்த தொழில்<br>தொ.இ B/7263 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 7<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc/ வங்கியாளர் லண்டன்<br>தொ.இ G/6108 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>தொ.இ B/7264 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 1/2<br>உயரம்: 168 CM<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ G/6110 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா : 40<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ வங்கியாளர்<br>தொ.இ B/7265 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>தொ.இ G/6114 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 35 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:MBA/ பொறியியலாளர்<br>தொ.இ B/7266 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 38 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ G/6118 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவின் புதிய பதவி குறித்து தவறான கருத்துக்களை வெளியிடாதீர்

## நிதியமைச்சர் ரவி கோரிக்கை



(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்படவுள்ள புதிய பதவி குறித்து தவறான கருத்துக்களை வெளியிட வேண்டாம். முன்னைய ஆட்சியின் அராஜக போக்குக்கு நாட்டை நாம் கொண்டு செல்ல மாட்டோம். நாட்டை குழப்பும் சதிகாரர்களிடம் இருந்து தக்க பதிலளிக்கும் நோக்குடனே பொன்சேகாவிற்கு புதிய பதவி வழங்கவுள்ளோம் என நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

அத்துடன் அந்நிய செலாவணி தொடர்பான புதிய சட்ட மூலத்தின் ஊடாக எமது நாட்டவர்கள் வெளிநாடுகளில் வைப்பு செய்துள்ள பணங்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கே நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எனவே இலங்கையில் பூரண பாதுகாப்பை நாம் வழங்குவோம். உங்களுடைய பணங்களை வெளிநாடுகளில் வைப்பு செய்யாமல் இலங்கையில் வைப்புச் செய்யுங்கள். மாறாக சட்டவிரோத முறையில் அரசியல்வாதிகள் வெளிநாடுகளில் வைப்பு செய்தால் எந்தவொரு மன்னிப்பும் வழங்கப்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

கோட்டையில் உள்ள நிதி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# திருமலை அபிவிருத்திக்கு இந்தியாவும் இலங்கையும் கூட்டுச் செயலணி



திருகோணமலையில் வீதிகள் அபிவிருத்தி, பெற்றோலிய அபிவிருத்தி, துறைமுக மற்றும் ஏனைய தொழிற்றுறைகள் தொடர்பாக ஆராய்வதற்கு இந்தியாவும் இலங்கையும் இணைந்து கூட்டுச் செயலணி ஒன்றை அமைக்கவுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கோபால் பக்லே டில்லியில் நேற்று முன்தினம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

"திருகோணமலையில் துறைமுகம், எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக இந்தச் செயலணியே மேலதிக கலந்துரையாடல்களை நடத்தும்.

இரண்டு நாடுகளும் பொருளாதார ஒத்துழைப்பு திட்டங்கள் தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டை கடந்த புதன்கிழமை செய்து கொண்டுள்ளன. பொருளாதார முதலீடு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பின் மூலம், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உடன்பாடு மூலம் உட்கட்டமைப்பு, விவசாயம், கால்நடை உள்ளிட்ட சில துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படும்.

குறிப்பாக, 500 மெகாவோட் இயற்கை எரிவாயு மின் திட்டம், கெரவலப்பிட்டியவில் இயற்கை எரிவாயு முனையம் மற்றும் மிதக்கும் களஞ்சியம், சம்பூரில் 15 மெகாவோட் சூரிய மின் திட்டம், திருகோண மலை உயர்நிலை எண்ணெய்த் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்யும் திட்டம் ஆகியனவும் இந்த உடன்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை- இந்தியா இடையே ஒரு கூட்டுச் செயலணி உருவாக்கப்பட்டு, வீதிகள் அபிவிருத்தி, பெற்றோலிய அபிவிருத்தி மற்றும் திருகோணமலையில் ஏனைய தொழிற்றுறைகள் தொடர்பாக ஆராயப்படும்.

கள், குறிப்பாக பொருளாதார வலயங்கள், வீதி அமைப்புகள், தொடருந்து துறை, கொழும்பில் கொள்கலன் முனையம் போன்றவற்றை கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வது குறித்தும் இந்தச் செயலணி அடையாளம் காணும்.

இது நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரலுக்கான ஒரு பாதை வரைவு மட்டுமே. இவை எல்லாம் குறித்தும் மேலதிக கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும். இணக்கப்பாடுகள் ஏற்பட வேண்டும். குறிப்பாக மேல் நிலை எண்ணெய் தாங்கிகள் தொடர்பாக பேசப்பட வேண்டும்" என்றும் தெரிவித்தார். (இ-7)

# நிலையான சமாதானத்தை உருவாக்க தமிழ்-சிங்கள சிறுவர்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்

## சந்திரிகா வலியுறுத்து



(கொழும்பு)

போர் வெற்றிகொள்ளப்பட்டபோதும் நாட்டில் சமாதானம் ஏற்படவில்லை என்றும், நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த தமிழ் - சிங்கள சிறுவர்களிடையே புரிந்துணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"போரை வெற்றி கொண்டதாகக் கூறிக்கொள்ளும் கடந்தகால அரசாங்கம், போரின் பின்னரான நாட்டின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தவில்லை. சமாதானத்துக்கான முயற்சிகளையும் எடுக்கவில்லை. மாறாக, அவர்களது அனைத்து இயலாமைக்கும் போரைக் காரணம் காட்டிக்கொண்டனர். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த, போரை வெற்றி கொண்டமை மட்டுமே [illegible] அம்சங்கள் குறித்து கவனம் செலுத்தினால் மட்டுமே நிலையான சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

"கொழும்பு, கம்பஹா பகுதிகளைச் சேர்ந்த சிங்கள சிறுவர், சிறுமியர்கள் வட-கிழக்குப் பகுதியில் உள்ள சிறுவர், சிறுமியருடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகள் எதுவும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. இதைக் கருத்திற்கொண்டு, அனைத்துப் பாடசாலைகளும் எல்லா சமயங்களினதும் முக்கிய திருநாட்களைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப் [illegible] இவ்வாறு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கேலி செய்யும் உரிமை எப்போது வரும்?

சிலபேர் இங்கிதம் தெரியாமல் அறிமுகமாகும் அந்தக் கணத்திலேயே பிறரைக் கேலி செய்யத் தொடங்கி விடுவார்கள். இதனால் நட்பு மொட்டு மலரவே வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

மிகப் பலரை வைத்துக் கொண்டு மிக வேண்டியவர்களே கேலி செய்தாலும் சம்பந்தப்பட்டவர்கள் ரொம்பவும் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். எனவே பெரிய சபையில் எவ்வளவு வேண்டியவராக இருந்தாலும் சரி, அவரைக் கேலி செய்ய வேண்டாம். காரணம், ஆட்கள் சேரச் சேர இவர்களெல்லாம் நம்மைப் பற்றி உயர்வாக எண்ண வேண்டும் என்ற எண்ணமே மனிதனுக்கு மேலோங்கி விடுகிறது. தான் மிகவும் மதிக்கும் நபர் ஒரு சிலரே இருந்தாலும் அத்தகைய இடத்திலும், தாம் கேலி செய்யப்படுவதை எவரும் விரும்புவது இல்லை.

வெளியே தெரியக்கூடாத விடயமாக இருக்கும் பட்சத்தில் சுற்றி யாரும் இல்லாத போதும் – அதாவது கேலி செய்பவரும் கேலிக்கு ஆளாகுபவரும் மட்டுமே இருந்தாலும் – அதையும் எவரும் விரும்புவதும் இல்லை.

யாராக இருந்தாலும் எத்தகைய சூழ்நிலையாக இருந்தாலும் உற்குறைகளைச் சுட்டிக் காட்டி கேலி செய்வதை எவரும் விரும்புவது இல்லை.

சூழ்நிலை எப்படி அமைந்தாலும் சரி, ஒருவருக்கு மனநிலை சரியற்று இருக்கும் போது (மூட்அவுட்) மிகச் சாதாரணமான விடயம் கூடக் கேலி செய்யப்படக் கூடாது. ஆக கேலி செய்யுமுன் ஒருவரது அப்போதைய மனநிலை எப்படி இருக்கிறது என்பதை இலேசாக நாடி பிடித்துப் பார்த்துவிடுவது நல்லது. இதைச் செய்யாவிட்டால் நாம் நினைத்து நினைத்து வருத்தப்படும்படியாக ஆகிவிடும். நம்மிடத்தில் மிகுந்த மரியாதை கொண்டிருக்கிறவர்களையும், நாம் கேலி செய்ய உரிமை இல்லை.

ஒருவரைக் கேலி செய்கிறோம் என்றால் அவருக்கும் நமக்கும் நல்லுறவு இருக்க வேண்டும். அவர் எதைக் கேலி செய்தாலும் நிச்சயம் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார் என்பதை நாம் மனப்பூர்வமாக நம்ப இடமிருக்க வேண்டும்.

கேலிக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருள் பொதுவான ஒன்றாக இருந்துவிட்டுப் போகட்டும்! அங்கு இருக்கும் நபர்களைத் தவிர மற்ற எவரையோ பற்றியதாக இருக்கட்டுமே! ஏன் – முற்றிலும் சம்பந்தமில்லாத ஒரு தலைப்பாக இருக்கலாமே!

கேலியின் நோக்கம் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதுதானே தவிர, மற்றவர்களைப் புண்படுத்த அல்ல, இந்த உண்மையை உணராதவர்கள் நட்பையும் உறவையும் இழக்கிறார்கள். மற்றவர்களிடமிருந்து மிகவும் விலகிவிடுகிறார்கள் அல்லது விலக்கப்படுகிறார்கள்.

லேனா தமிழ்வாணன்

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—115

## பட்டினியின் கொடுமையும் குப்பைமேடு சரிந்த இடரும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 131

உலக உணவு தாபனத்தின் கடைசியாக நடைபெற்ற கவுன்சிலில் உரத்துக் கூறப்பட்ட செய்தியாக பட்டினியை நோக்கி உலகம் என பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. 20 மில்லியன் மக்கள் அடுத்த ஆறுமாதங்களுக்குள் பட்டினியால் இறக்கப் போகின்றனர் என கட்டியங் கூறியிருக்கின்றார்கள். இது வெறும் செய்தியல்ல. உலக நடப்பினைப் பார்க்கும் போதும் காலநிலையின் கடினத்தை உணர்ந்த போதும் இது சாத்தியமாகும் எனந ம்பித்தான் ஆக வேண்டியிருக்கின்றது.

உலகில் குறிப்பிட்ட தொகை மக்களுக்கு உணவில்லை என்பதும் அதனால் பட்டினிச்சாவை தடுக்க முடியாதிருக்கும் என்னும் போது உள்ளார்ந்து ஒரு நெருடல் உருக்கொள்கின்றது பாருங்கள். இது மனித குலத்திற்கான சாபம் என்பதனைத் தவிர வேறென்பது?.

தனிமனிதனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினையே அழித்து விடுவோம் என்ற அறை கூவல் ஓயமுன்பு உணவில்லையென்றாலும் ஜெகத்தினை அழித்தே தீருவோம் என்றாகியிருக்கின்ற ஓர்மம் மனித அவலமாக ஏவிளம்பியில் நடக்கின்றது. வெறுமனே கலியுககாலமிது. அதனால் நடக்கின்றது என வாழாவெட்டியாக நாமும் இருக்கப் பழகிவிட் டோம்.

ஒருபக்கம் பட்டினிச்சாவை முழுமையாக தடுக்கவேண்டுமென பலவிதமான திட்டங்களை உலகதாபனங்களும் பலநாடுகளின் அரசாங்கங்களும் முனைப்புடன் செயற்பட முனைந்தாலும் நாம் எதிர்பார்க்கின்ற உணவுற்பத்தி முழுமையாக சாத்தியமா என்பதனை நாம் சற்றேனும் அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும்.

எங்கும் பகையுணர்வும், அரசியல் மயமும், போர்ச் சூழலும், அதற்கான முன்னேற்பாடுகளும் என உலகத்தின் நடப்புக்கள் அழிவை நோக்கியே விரிந்து செல்கின்றன. அழிவுக்கான முனைப்பை காட்டுகின்றதிலேயே பல நாடுகள் இருப்பதுவும் சமாதானம், புரிந்துணர்வு,விட்டுக்கொடுப்பு என்பன எம்மை விட்டு விலகியே நிற்பதுவும் இவ்யுகத்தில் பட்டினிச்சாவுக்கு காரணமாக இருக்கின்றது.

சந்திரனுக்கு நீர் தேடிச் சென்ற விஞ்ஞானத்தினால் இங்கே குடிப்பதற்கு நீரைக் கொடுக்க முடியாதிருக்கின்றது.

சோமாலியா, வடகிழக்கு நைஜீரியா, தென்சூடான், ஏமன் ஆகிய நாடுகளில் தற்போது கொடூரமான பட்டினி தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. அந்த நாடுகளிலுள்ள மக்கள் உண்ண உணவின்றி அதிலும் போசாக்கான உணவின்றி தினந்தினம் இறந்து கொண்டிருக்கும் செய்தி அனைவரையும் உலுக்கி விட்டிருக்கின்றது. மழலைகள், வயதானோர், பெண்கள் என பாகுபாடின்றி அனைவரும் உணவுப் பற்றாக்குறைக்குள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

உலக நாடுகளில் குறிப்பாக வளர்ந்த நாடுகளில் போதுமான உணவுற்பத்தி செய்யப்பட்டு தமது தேவைக்கதிகமானதை வர்த்தகத்தில் அதுவும் உலகநாடுகளில் அவற்றுக்கான விலையில் வீழ்ச்சியேற்படாத வண்ணம் கடலில் கொட்டும் நிகழ்வுகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒருபக்கம் நிதியென்றும் கடனென்றும் வளர்முக நாடுகளுக்கு தருவதாகவும் பிச்சையிடுவதாகவும் கூறிக்கொள்ளும் மேலைத்தேயம் மறுபக்கத்தில் அன்றாட அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலையினை வீழ்ச்சியடையாது பார்த்துக் கொண்டும் இருக்கின்றன என்றால் பாருங்களேன்.



இந்த இராஜதந்திரத்தில் அடிபட்டுப்போன மூன்றாம் உலக நாடுகள் மீளவும் முடியாமல் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும் முடியாமல் சிக்கித் தவித்து சின்னாபின்னமாகி விடுவதையும் அவதானிக்கலாம். பெருவளர்ச்சி கண்டிருக்கும் விஞ்ஞான தொழில்நுட்பத்தினால் இந்த பஞ்சம் பசி பட்டினியைத் தீர்க்கமுடியாதென்றா நினைக்கின்றீர்கள். முடியும். ஆனால் அவரவர்கள் மனதுவைத்தால் தானே இவையெல்லாம் சாத்தியம்.

விஞ்ஞானம் நினைத்தாலும் மனிதன் நினைக்க வேண்டுமே! போருக்காக மனிதனை அவர்களின் உடைமைகளை அழிப்பதற்காக செலவிடப்படும் பணத்தை ஒன்று சேர்த்தால் உலகில் உற்பத்தியாகும் உணவினை அனைவருக்கும் கிடைக்கச் செய்தால் பஞ்சமும் பட்டினியும் ஒரு பொருட்டல்ல.

மேலைத்தேய நாடுகளின் சட்டவரைபுகள் மற்றையநாடுகளினை அடிமைப்படுத்துவதிலும் அவர்களினை சுயமாக இயங்க அனுமதிக்காமையும் சொல் கேட்டு நடக்கும் செல்லப்பிள்ளைகளாக வைத்திருப்பதிலும் அக்கறை காட்டுவதனால் இத்தகைய எதிலும் தங்கியிருக்கும் நாடுகள் தம்மால் ஒருநிலைக்குமேல் எதுவும் செய்யமுடியாது இருக்கின்றன.

சோமாலியா, வடகிழக்கு நைஜீரியா, தென்சூடான், ஏமன் நாடுகளுக்குட்பட்ட பலநாடுகளில் உள்நாட்டு கலவரங்களினாலும் போர்களினாலும் அந்தந்த நாடுகளின் பொருளாதார வளங்கள் அழிக்கப்பட்டு மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக இருக்கின்ற காரணத்தினால் இந்த நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இவற்றுடன் சேர்ந்து காலநிலை க்ாரணிகளும் வரட்சியையும், பூமியதிர்ச்சியுடனான வெள்ள அனர்த்தத்தையும் இன்னும் சூறாவளியையும் தோற்றுவிப்பதனால் மேலும் பிரச்சினைகள் பூதாகாரமாக பெருகி விட்டிருக்கின்றன.

2016ஆம் ஆண்டு தகவலின் படி ஏமனில் 14.1 மில்லியன், ஆப்கானிஸ்தானில் 8.5 மில்லியன், வடக்கு நைஜீரியாவில் 8.1 மில்லியன்,சிரியாவில் 7.1 மில்லியன் மற்றும் தெற்கு சூடானில் 4.4 மில்லியன் மக்களும் நடைபெறும் போரின் காரணமாக இடம்பெயர்ந்திருப்பதாக உலக உணவு தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் இயற்கை அனர்த்தத்தின் காரணமாக எதியோப்பியாவில் 9.7 மில்லியன், மலாவியில் 6.7 மில்லியன், சிம்பாவேயில் 4.1 மில்லியன், ஹெட்டியில் 1.5 மில்லியன் மற்றும் மொசாம்பிக்கில் 1.1 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுமிருக்கின்றார்கள்.

இந்த தகவல்கள் பாரியளவில் நடைபெற்ற பாதிப்புக்களை காட்டி நிற்பினும் மற்றையநாடுகளிலும் இடப்பெயர்வுகள் பலவும் போரினாலும் இயற்கையனர்த்தங்களினாலும் நடைபெற்றிருக்கின்றன.

இவையொரு பக்கம் இருக்க இனியொரு பசுமைப் புரட்சியில் உலகம் என்ன செய்யப் போகின்றது என்னும் வினா நிச்சயமாக உங்கள் முன் எழுந்திருக்கும். 60 களில் நடைபெற்ற பசுமைப் புரட்சியின் தாக்கம் இன்னும் எமது தேசத்தில் உணவுற்பத்திக்கு உயிர்கொடுத்திருந்தாலும் எமது சூழலை வெகுவாகவே பாதித்திருக்கின்றது.

மேலைத்தேயத்தின் சிந்தனைகளுக்குட்பட்டு எமது வளத்தை நாம் வினைத்திறனாக பயன்படுத்தத் தவறியதும் எமது சூழலை மாசுபடுத்தும் காரணிகளுக்கு நாம் அடிமையானதையும் தவிர வேறு எதனையும் நாம் புதிதாகஉண்டுபண்ணவில்லை. அதிகரித்துவரும் சுகாதார சீர்கேடுகள் இவற்றை கட்டியங் கூறி நிற்பதனை நாம் கண்ணூடாக காணலாம்.

எமது நாட்டில் அண்மையில் நடைபெற்ற குப்பைமேடு சரிவும் அதனால் காவுகொள்ளப்பட்ட உயிர்களும் எமது கவலையீனமே தவிர வேறெதுவுமில்லை. குப்பைகளை வினைத்திறனாக மீள் சுழற்சி செய்யும் திட்டங்களுக்கு அதிக முன்னுரிமையளிக்காமையும் புத்தாக்கங்களை அத்துறை சார்ந்து முன்னகர்த்தாததுமே இவ்வாறான பிரச்சினைகளை முன்கூட்டியே எதிர்கொள்ள திராணியற்று இருக்கவைத்துள்ளது.

உருவாகும் கழிவுகளில் ஏறக்குறைய 80-85 சதவீதம் சேதனக் கழிவுகளாகவும் ஏனையவற்றில் விரைந்து உக்காதனவும் கண்ணாடி, உலோகம் மற்றும் பிளாஸ்டிக் என்பனவும் காணப்படுகின்றன. சேதனக் கழிவுகளை இத்தேசம் முழுவதுமாக மீள்சுழற்சி செய்யும் திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்திருந்தால் அநேகமாக கழிவுகள் கூட்டுரமாக மாற்றப்பட்டு மீற்சுழற்சிமுறையில் பயிர்ச் செய்கைக்கு பயன்பட்டிருக்கும். ஆனால் எமது கவலையீனம் இங்கும் உயிர்களைக் காவு கொள்வதில் இருந்திருக்கின்றது.

மேலைநாடுகளில் சூழலை மாசுபடுத்தும் காரணிகளின் செயன்முறைகளுக்கு எதிராக இறுக்கமான சட்டதிட்டங்கள் வரையப்பட்டு அவை அமுல்படுத்தப்பட்டும் வருகின்றன. இதனை எமது நாட்டில் ஏன் செய்ய முடியவில்லை? இவையெல்லாம் எமது நாட்டில் அமுலிலிருக்கும் கோவைகளின் இறுக்கமற்ற தன்மையையும் அவற்றை முறையாக அமுல்படுத்தாத மக்கள்மயப்பட்ட சபைகளுமாகும். நாட்டின் சட்ட திட்டங்கள் வரையப்படுவதும் அவற்றை அங்கீகரிப்பதும் முறையாக அவற்றை நடைமுறைப்படுத்துவதிலேயே தங்கியிருக்கின்றது.

இவை முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என கண்காணிப்பதும் அவற்றிலுள்ள தடைகளை நீக்கி முறையான, செம்மையான நடைமுறைகளை உருவாக்கிக் கொடுப்பதும் அத்துறை சார்ந்த அதிகாரிகளின் கடமையாகும். அனைத்தையும் அரசியல்மயமாக்கி சட்டமும் திட்டங்களும் அரசியல் செல்வாக்கினுள் சிறைப்பட்டிருப்பதனால் இவற்றுக்கு என்றுமே தீர்வு கிடைக்காது என்றாகி விட்டது.

உலகநாடுகளில் பசிபட்டினி என நாம் பேசிக்கொண்டாலும் எமது நாட்டிலும் இதற்கான சூழ்நிலைகள் இல்லையென்று நாம் வாழாதிருக்கலாகாது. அன்றாடம் வேலைசெய்து அந்த ஊதியத்தில் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு இத்தகைய பட்டினியின் தாக்கம் அதிகம். இன்றும் பலருக்கு ஒருவேளை உணவு கூட கிடைக்கவில்லை என்பதும் உண்ணும் உணவு சமநிலையுணவாக இருக்காதிருப்பதும் ஊட்டச்சத்து குறைபாடு காணப்படுவதும் எமக்கான எதிர்கால சவால்களாகும்.

ஊட்டச்சத்து குறைபாடு தனிமனித சுகாதார சீர்குலைவுக்கு வழிகோலும். பட்டினியை போக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். அதே நேரத்தில் சுகாதாரமான உணவினை உற்பத்தி செய்வதற்கும் அதனை மக்கள் இலகுவாக பெறுவதற்கும் வழிவகை செய்தல் வேண்டும். கழிவு முகாமைத்துவத்திற்கு முக்கியத்துவமளித்து அதனை முழுவதுமாக மீள்சுழற்சிசெய்து சேதன விவசாயத்திற்கு உரமூட்டுவது இன்றைய சிந்தனைக்கும் நாளைய நல்வாழ்வுக்குமான தாகும் இது அனைவருக்குமான மேதினச் செய்தியாக வெறும் அரசியல்வார்த்தை ஜாலமாக இருந்துவிடாது அனைவரும் இணைந்து செயலாற்றும் செயற்பாடாக மாற்றம் பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்துக்குள் புகுந்து போராட்டக்காரர்கள் தாக்குதல்



(ஸ்கோப்ஜ்)

மசிடோனியா நாட்டில் பாராளுமன்றத்துக்குள் புகுந்து போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஐரோப்பிய நாடான மசிடோனியாவில் அல்பேனியன் நாடு உருவானதில் இருந்து கடந்த 2001 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது.

முன்னாள் பிரதமர் நிகோலா குருவ்ர்கியின் வி.எம்.ஆர். ஓ. கட்சி, ஆட்சி முடக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சோசியல் ஜனநாயகக் கட்சி தலைவர் ஷோரன்ஷயீவ் அல்பேனியா ஆதரவு பெற்ற கட்சியுடன் இணைந்து புதிய அரசு அமைக்க முயன்று வருகிறார்.

இதற்கிடையே மசிடோனியா பாராளுமன்றத்தில் அல்பேனியன் கட்சியைச் சேர்ந்தவர் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த வி.எம். ஆர்.ஓ. கட்சியினர் 200 பேர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்துக்கு பேரணியாக சென்றனர்.

பின்னர் திடீரென பாராளுமன்றத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். அதில் சோசியல் ஜனநாயகக் கட்சி தலைவர் ஷோரன் ஷயீவ் உள்ளிட்ட 10 பேர் காயம் அடைந்தனர்.

இதற்கிடையே சோசியல் ஜனநாயகக் கட்சி மற்றும் அல்பேனியன் கட்சி இணைந்து புதிய அரசு அமைக்கும் முயற்சிக்கு ஜனாதிபதி தடை விதித்துள்ளார். (இ-3)

# தென்கொரியாவில் அமைக்கும் ஏவுகணை எதிர்ப்பு கவணுக்கு 100 கோடி டொலர் கேட்கும் ட்ரம்ப்



(சியோல்)

வடகொரியாவின் சவாலை எதிர்கொள்ளும் வகையில் தென்கொரியாவில் அமைக்கப்படும் ஏவுகணை எதிர்ப்பு கவணுக்கு 100 கோடி டொலர்களைத் தர வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிபந்தனை விதித்துள்ளார்.

வடகொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் (THAAD system) என்ற அதிநவீன ஏவுகணை எதிர்ப்பு கவண் நிறுவும் பணிக்கு முக்கியத்துவம் அளிக்க அமெரிக்கா தீர்மானித்தது.

இதுதொடர்பாக, பசுபிக் பெருங்கடல் நாடுகளுக்கான அமெரிக்க இராணுவ தளபதி ஹாரி ஹாரிஸ் வெளியிட்ட அறிக்கையில், 'அமெரிக்காவை சீண்டிப் பார்த்து, சண்டைக்கு அழைக்கும் வடகொரியாவின் எரிச்சலூட்டும் செயல்கள் எல்லாம், இந்த எதிர்ப்பு கவண் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது' என குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த கவண் அமைப்பதற்கான மொத்த செலவினங்களையும் தென்கொரியா அளிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தற்போது தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக, நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த ட்ரம்ப்.

அமெரிக்கா- தென்கொரியா இடையில் கடந்த ஐந்தாண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த 'வர்த்தக தாராளமயம்' என்ற கொள்கையை இனியும் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. முந்தைய ஆட்சிக் காலத்தின்போது கடந்த 2011 ஆம் ஆண்டில் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனால் பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெறுவதற்கு முன்னர் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தை நாம் அனுமதிக்க முடியாது.

இந்த ஒப்பந்தத்தின்படி, வடகொரியாவின் ஏவுகணை தாக்குதலில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தென்கொரியா அமைக்கும் ஏவுகணை எதிர்ப்பு கவணுக்கு அமெரிக்க அரசு எதற்காக சுமார் 100 கோடி டொலர்கள் அளவிலான பணத்தை செலவழிக்க வேண்டும்?

எனவே, எதிரியின் ஏவுகணைகளை வான்வெளியில் சுட்டு வீழ்த்தும் ஆற்றல் படைத்த இந்த கவணுக்கான விலையை அமெரிக்காவுக்கு தென்கொரியா அளிக்க வேண்டும் என அந்நாட்டு அரசிடம் தான் தெரிவித்துள்ளதாக ட்ரம்ப் தெரிவித்தார். (இ-3)

# அ.தி.மு.க.அணிகளின் பேச்சு அர்த்தமற்றது

## சீமான் தெரிவிப்பு

தமிழகத்தில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் ஏராளமாக உள்ள நிலையில் அ.தி.மு.க. அணிகளின் பேச்சுவார்த்தை அர்த்தமற்றது என சீமான் தெரிவித்தார்.

மதுரை விமான நிலையத்தில் நேற்றுக் காலை நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் நிருபர்களிடம் கூறியதாவது.

மக்கள் குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அ.தி.மு.கவின் இரு அணியினரும் இந்தியா-சீனா போன்று சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் ஏராளமாகவுள்ள நிலையில் அ.தி.மு.க. அணிகளின் பேச்சுவார்த்தை அர்த்தமற்றது. மக்கள் இயக்க தலைவர் தமிழருவி மணியன் என்னை தீவிரவாதி என்று கூறியதை பொருட்படுத்த வில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1058

Search for people, places and things Nagendram Home

ரதி




டினா




கவி




அஸ்வந்த்




டனிற்றா




மேனன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கண்ணீர் அஞ்சலி



கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய
உடற்கல்வி ஆசிரியரான
திரு.ம.வினோகாந்தன்
அவர்களின் தந்தையாரான
அமரர்
**செல்லையா மகாதேவன்**
அவர்களின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர்வு : 09.01.1937
உதிர்வு : 25.04.2017

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.


# சர்வதேச இஸ்லாமிய மாநாடு கொழும்பில் ஆரம்பம்





(கொழும்பு)

இஸ்லாமிய யதார்த்தமும் சமகால சவால்களும்" எனும் தொனிப் பொருளிலான சர்வதேச இஸ்லாமிய மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில்ஆரம்பமானது.

நேற்று முன்தினம் 9.30 மணிக்கு அலரிமாளிகையில் ஆரம்பமான அங்குரார்ப்பண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன் சபாநாயகர் கருஜயசூரிய கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலும், இம்மாநாட்டில் நாற்பது நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், மார்க்க அறிஞர்கள், துறைசார் நிபுணர்களும் கலந்து கொண்டுள்ளனர். (இ-7)

# பொன்சேகாவுக்கு புதிய பதவி குறித்து ஜனாதிபதி கூறியது நகைச்சுவையல்ல

## அமைச்சர் விஜயமுனி சொய்ஷா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் தலைமையின் கீழ்விசேடபடையணியொன்றை அமைப்பது தொடர்பில் அமைச்சரவையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கருத்தை ஒரு முக்கிய விடயமாக நான் பார்க்கின்றேன் என அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்ஷா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

யாரும் அதனை நகைச்சுவையாக எடுத்தது போன்று நான் அதனை அப்படிக் கூற மாட்டேன். அது முக்கிய விடயம். நானும் ஜனாதிபதியின் அந்த யோசனைக்கு கையை உயர்த்தினேன். ஜனாதிபதி நகைச்சுவையாக சொன்னாரா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. ஜனாதிபதியும் அதனை. முக்கிய விடயமாக கொண்டிருப்பார் என்றே கருதுகின்றேன்.

ஒரு சிறிய குழுவுக்கு இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாது. இவர்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும். முன்னைய காலகட்டங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் எவ்வாறு நடத்தப் பட்டார்கள் என்பதை நாம் மறக்கவில்லையே. இராணுவத்தினர் பிரயோகிக்கப் பட்டனர் எனவும் அமைச்சர் நினைவு கூர்ந்தார். (இ-7)

# சிரேஷ்ட சட்டத்தரணிகள் 25 பேர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமனம்

(கொழும்பு)

சிரேஷ்ட சட்டத்தரணிகள் 25 பேர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை ஜனநாய சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 (2)(ஈ) பிரிவின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உள்ள அதிகாரத்துக்கமைய சட்டத்தரணி தொழில் வாண்மையில் சிறப்பு பெற்றவர்கள் ஜனாதிபதி யால் இவ்வாறு சட்டத்தரணிகளாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

அதற்கமைய தயா பல்பொல, ஆரிய பீ ரேக்காவ, அநுர பண்டார மெக்கவ, நிஸ்ஸங்க நாணயக்கார, நெவில் அபேரத்ன, டப்ள்யூ. கே.அனுஜ கௌசிக்க பிரேமரத்ன, ஏ.எல்.எம். ஹிதாயத்துல்லா, சமந்த ரத்வத்த, விஜேரத்ன தர்மசேன, உபாலி சேனாரத்ன, பத்ம பண்டார, எஸ்.கே.மார்க் பீரிஸ், கருணாரத்ன ஹேரத், மகேந்ர சுவந்தரத்ன, ஏ.பீ.சீ. எம்.ஜயசேகர, மொகான் வீரக்கோன், பீ.ஆர். எஸ்.பீ. சமரநாயக்க, உபுல் ஜயசூரிய, ஆனந்த விக்ரமசேகர, ஜே.சீ.வெலிஅமுண, எம்.ஏ.சுமந்திரன், விஜய நிரஞ்சன் பெரேரா, கருணா தேவகே விமலதாஸ, மொஹமட் நிசாம் காரியப்பர், விவேகானந்தன் புவிதரன் ஆகியோர் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

# உத்தியோகபூர்வ அழைப்பு வந்தால் கருத்திற் கொள்ளப்படும் - திஸ்ஸ

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற வேண்டுமானால் கடந்த காலங்களில் கட்சிக்காக பாடுபட்டவர்களை கவனிக்க வேண்டுமென ஐ.தே.கவின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இந்த கருத்தை தெரிவித்தார்.

தான் பாரம்பரிய ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் எனவும் கட்சி ஆதரவாளர்கள் தொடர்பில் உள்ள வேதனையுடனே தான் கதைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தான் ஐக்கிய தேசிய கட்சிக்காக தனது வாழ்க்கையின் அரைவாசி அளவு அர்ப்பணித்துள்ளதாகவும், உத்தியோகபூர்வ அழைப்பு வந்தால் கட்சியுடன் இணைவது தொடர்பில் கருத்தில் கொள்வதாக திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சவால்களுக்கு மத்தியில் நான்கு சதவீத பொருளாதார வளர்ச்சி - மத்திய வங்கி

(கொழும்பு)

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் நான்கு சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கட்டுமானத்துறையில் முதலீடுகள் அதிகரித்தமை வளர்ச்சிக்கு பிரதான காரணமென மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது தவிர சேவைகள், நிதிக்காப்புறுதி, தொலைத்தொடர்பாடல் முதலான துறைகள் சார்ந்த பங்களிப்பும் அதிகமாகும்.

இதேவேளை, கடந்த ஆண்டு கைத்தொழில் துறை ஆறு தசம் நான்கு சதவீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

எவ்வாறேனும், சீரற்ற காலநிலையின் விளைவுகள் காரணமாக விவசாயத் துறை வீழ்ச்சி கண்டது.

தேயிலை, இறப்பர் உற்பத்தியும் குறைந்ததென இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் தற்போது உயிருடன் இருந்தால் கூட்டமைப்பினருக்கு உயிர் இருக்காது

## ஆனந்தசங்கரி உறுதிபடத் தெரிவிப்பு



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பாதுகாப்புத் துறையில் முக்கிய பதவியை பெற்றுக் கொண்டால் தமிழர்கள் மீளவும் சுதந்திரமற்ற நிலைக்கு தள்ளப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, தமிழீழ விடுதலைப் புலிகளை வைத்து எனது பதவியை பறித்தவர்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். புலிகள் தற்போது உயிருடன் இருந்தால் இப்போது கூட்டமைப்பில் இருப்பவர்கள் உயிருடன் இருக்கமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மிக மோசமான நிலைக்கு இந்த நாடு தற்போது சென்று கொண்டிருக்கின்றது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் போது இராணுவத் தளபதியாக செயற்பட்ட சரத் பொன்சேகா ஜனாதிபதி மைத்திரிபால அரவணைப்போடு பாதுகாப்பு துறையில் முக்கிய நபராக நியமிக்கப்படவிருக்கின்றார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படும் போது தமிழீழ விடுதலைப்புலிகளை கூண்டோடு அழித்தவன் நான் தான், யுத்தத்திற்கு பின்னர் இராணுவத்தினரின் எண்ணிக்கையை இரு மடங்காக மாற்றுவேன் என மார் தட்டியவர்தான் இந்த சரத் பொன்சேகா. பாதுகாப்புத் துறையில் உயர் அதிகாரியாக இந்த சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டால்,தமிழர் தரப்பு மீண்டும் பழைய நிலைக்கே செல்ல வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படும்.

ஏனென்றால் யுத்தம் நடைபெறும் போது இராணுவத்தளபதி சரத் பொன்சேகா இராணுவ தளபதியாக இருந்த காலத்தில் வடக்கு கிழக்கில் இராணுவ நிர்வாகம் எப்படி இருந்தது என்று எல்லோருக்கும் தெரியும். மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத, பேசவே முடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறான ஒருவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்வுள்ள நிலையில் அதற்கு எமது தமிழ்த் தலைமைகளும் ஆதரவு தெரிவித்துள்ளது. இது ஒன்றும் ஆச்சரியமில்லை. யுத்தத்தில் புலிகள் தான் அதிகளவில் மக்களை கொன்றார்கள் என கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறி, புலிகளையும் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

சம்பந்தன் அரசுக்கு இறுதி சந்தர்ப்பம் என்று கூறுகின்றார். மாவை சேனாதிராசா போராட்டம் வெடிக்கும் என்று கூறுகின்றார். இவ்வாறு தான் இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டுள்ளார்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நினைத்தால் அரசியல் கைதிகளை விடுவிக்க முடிவதோடு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை பெற்றுக்கொடுக்க முடியும். இராணுவம் பிடித்து வைத்துள்ள காணிகளையும் மக்களிடம் மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இவை அனைத்தையும் அரசாங்கம் இரு வாரங்களுக்குள் செய்யத் தவறினால் அரசாங்கத்தை கவிழ்ப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தை எச்சரிக்கை செய்ய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையில் இரண்டுவருட கால அவகாசத்தை வழங்கியபோது அதற்கு அனுசரணையாக இருந்தவர்கள் 2 வார காலக் கெடுவை வழங்கி எச்சரிக்கை செய்ய முடியாதா?

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எனக்கும் முரண்பாடுகள் இருந்ததாக கூறுகின்றார்கள். புலிகள் இலட்சியத்துக்காக மட்டும்தான் போராடினார்கள். யாரையும் கொல்வதற்காக போராடவில்லை என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை வைத்து எனது பதவியை பறித்தவர்கள் ஒன்றை உணர்ந்துகொள்ள வேண்டும். புலிகள் தற்போது உயிருடன் இருந்திருந்தால் இப்போது கூட்டமைப்பில் இருப்பவர்கள் உயிருடன் இருக்கமாட்டார்கள். நான் பதவிக்கு வந்தால் 24 மணித்தியாலத்திற்குள் இராணுவ முகாம்களை அகற்றி மக்களை மீளக் குடியேற்றுவேன். இதே போன்று காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள் தொடர்பிலும் ஒரு தீர்வை என்னால் பெற்றுத்தர முடியும்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில், தலைவர் வே.பிரபாகரன் ஊடகவியலாளர் தராகி சிவராம் போன்றோரின் ஆசை போல் ஒரே குடையின் கீழ் போட்டியிடவுள்ளோம் என தெரிவித்த அவர் தலைவர் பிரபாகரன் என்னை சுடுவதற்கு நினைக்கவில்லை, வேறு சிலர் தான் நான் சுடப்படுவதை விரும்புகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

## தூய நீக்கிலார் ஆலய வருடாந்த திருவிழா

2017 சித்திரை மாதம் 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. தொடர்ந்து 9 நாட்கள் திருவிழா நவநாள் நிகழ்வுகள் நடைபெறும்.

29.04.2017 சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் திருநாள் கூட்டுத் திருப்பலி இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து தூயநீக்கிலாரின் திருச்சொரூப தேர்த்திருப்பவனி நடை பெறுவதோடு திருநாள் நிகழ்வு முடிவுறும்.

### தூய நீக்கிலாரின் வாழ்க்கை வரலாறு

3 நூற்றாண்டில் ஆசியாக் கண்டத்தில் அமைந்திருந்த பத்தார் என்ற நகரில் எப்பிபானஸ் - யுவான்னா என்ற பெயர் கொண்ட செல்வச் செழிப்பு மிக்க தம்பதிகள் பிள்ளைச்செல்வம் இன்றி வருந்தினர்.

இறைவனிடம் வேண்டியதன் பயனாக இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அப்பிள்ளைக்கு நீக்கிலஸ் எனப் பெயரிட்டு வளர்த்தனர். இப் பெயருக்கு பிரஜையின் வெற்றி என்பது பொருளாகும்.

சிறுவயதிலேயே இறை விசுவாசத்திலும் மிகுந்த புத்திசாலித்தனத்திலும் சிறந்து விளங்கினார். செல்வச் செழிப்பான வாழ்க்கையை வெறுத்து தருமநெறியிலும் கோவில் தியானங்களிலும் வேதகாரியங்களிலும் செலவிட்டார்.

இளம் வயதினிலேயே தாய்தந்தையரை இழந்த புனிதர் தனது மாமா முறையானவரின் கீழிருந்து வாழ்ந்து வந்தார்.

கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய அவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாக வந்த பின்னரும் தான தருமங்களில் சிறந்து விளங்கி இயேசுவுக்கு ஊழியம் புரிந்தார். இயேசு பாடுபட்ட திருத்தலங்களைப் பார்வையிட்டு வந்த அவர் மீரா பட்டணத்தின் ஆயர் இறந்த பின்னர் நாளை காலையில் முதலில் ஆலயத்திற்கு வரு பவரை ஆயராக நியமியுங்கள் என்ற வாக்கிற்கு ஏற்ப புனித நீக்கிலாரையே ஆயராக நியமித்தனர். பதவியேற்றத்தின் பின் மக்களுடைய ஆன்ம, சரீர நலன்களில் அதிகமாக ஈடுபாடு கொண்டு அப்பணியினை திறம்பட செயற்படுத்தி வந்தார்.

அக் காலத்தில் தியோக்கிளேசியன் என்ற அரசனால்



திருச்சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட வேத கலாபனையில் எதிரிகளால் நாடு கடத்தப்பட்டு பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். வேதகலாபனை முடிவுள்ள பின்னர் மீண்டும் மீரா பட்டணத்திற்கு வருகை தந்து பாதிக்கப்பட்ட மக்களை வேத நெறியில் கொண்டுவர அயராது உழைத்தார். மீரா பட்டணத்தில் பஞ்சம் ஏற்பட்ட போது அதனை நீக்கி மக்களின் அபிமானத்தைப் பெற்றார். புனித நீக்கிலார் 342 ஆம் நூற்றாண்டு மார்கழி மாதம் 6 ஆம் திகதி தேவ தூதர்கள் புடைசூழ மரணமானார். அவரின் [illegible] வெளிப்பட்டது எனக் கூறப்படுகிறது. நெயாப்பொலி இராச்சியத்தில் பாரி என்னும் பட்டணத்தில் அவர் பெயரால் அமைக்கப்பட்ட ஆலயத்தில் அவர் திருவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

### புனித நீக்கிலார் ஆலயத்தின் வரலாறு

1505ஆம்ஆண்டுதொடக்கம் ஐரோப்பிய நாடுகளின் வருகை ஏற்பட்டது எனலாம். இவ்வாண்டில் போர்த்துக்கீசர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகை தர முற்பட்ட காலம் எனலாம்.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த இவர்கள் கரை[illegible] தமது [illegible] நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பாரிய கப்பல்களில் வந்திறங்கியவர்களுக்கு உள்ளூர்களுக்குள் சென்று வர முடியாமலிருந்தது. இதைப் போக்குவதற்கு தங்களுடன் எடுத்துவரப்பட்ட சிறிய படகுகளாகிய மச்சுவாய்கள், நாவாய்கள், தோணிகள் போன்றவற்றின் உதவியுடன் செயற்படுத்தினர். ஊர்காவற்றுறையில் வந்திறங்கியவர்கள் தங்களது சிறிய படகுகளாகிய நாவாய்கள்,மச்சு வாய்கள் மூலம் தமது வியாபாரப் பொருட்களை கொண்டு சென்று சிறுசிறு துறைகளில் இறக்கினர். அவ்வாறு அவர்கள் வந்து இறங்கிய இடம் தான் எமது கிராமமாகும். நாவாய்கள் மூலம் வந்த படியால் நாவாயூர் என அழைக்கப்பட்டு பின்னர் நாவாந்துறை என மருவியது. அத்துடன் தமது பொருட்களை, ஏற்றி இறக்குவதற்கு ஏனைய கிராமங்களில் இருந்து கடற்றொழிலாளர்களைக் கொண்டு வந்து அவர்களுக்கென காணிகள் கொடுத்து குடியேற்றினர். அவர்கள் தான் படையாச்சியினர் என அழைக்கப்பட்டனர். இவர்களை சமயம் மாற்றி சமய நிகழ்வுகளுக்கென தூய நீக்கிலார் பேரால் சிறு ஆலயத்தையும் கொட்டில் ஆக அமைத்துக் கொடுத்தனர். இவர்கள் வருகையின் பின்னர் ஏனைய கிராம மக்களும் கிறிஸ்தவ சமயத்தை தழுவினர். இவ்வாறு பழைய சம்பிரதாயங்களுக்குட்பட்ட கிராமமாகவே இன்று வரை நாவாந்துறை கிராமம் திகழ்கிறது. கத்தோலிக்கக் குடும்பங்களின் எண்ணிக்கை பரவலாக அதிகரிக்க போர்த்துக்கீசரால் கொடுக்கப்பட்ட நிலத்தில் சிறிய ஆலயம் கட்டப்பட்டது.

இதன் பீடம் கடல் மூலமாக வந்தடைந்ததாக வரலாற்றுப் பதிவுகள் சான்று பகர்கின்றன. சிறிய ஆலயமாக இருந்த இவ்வாலயம் 1892 ஆம் ஆண்டு அருட்பணி லூயிஸ் பூலோகசிங்கம் அடிகளாரால் புனரமைக்கப்பட்டது.

பின்னர் பங்குத் தந்தையாக வருகைதந்த அருட்பணி பா.பி.இராஜசிங்கம் அடிகளார் காலத்தில் புதிய தோற்றம் பெற்று 20.08. 2011ஆம் ஆண்டு யாழ். ஆயரால் அபிஷேகம் செய்யப்பட்டு பங்கு மக்களின் ஆன்மீக நலன்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"புனித நீக்கிலார் முனீந்திரனே எமக்காக இயேசுவிடம் மன்றாடும்"

நாவாந்துறை
மரிசலீன் மரியதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரு தேவதைகள்



நயாகரா நீர்வீழ்ச்சி இடைவிடாமல் பாய்ந்து கொண்டிருந்தது. நீர்வீழ்ச்சியின் அழகை, இரண்டு தேவதைகள் வெகு நேரமாக ரசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அனீலஸ் என்ற பறவை, அந்த நீர்வீழ்ச்சியின் அருகே வந்தது. தேவதைகள் இருவரும் அந்தப் பறவையைப் பார்த்தனர்.

"அதோ பார் அனீலஸ் பறவை நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காக வந்துள்ளது" என்றது ஒரு தேவதை.

"ஆமாம்... ஆமாம்... அனீலஸ் பறவை, பன்னிரெண்டு வருடத்திற்கு ஒருமுறை தான் நீராடும். அது நீராடுகிற காட்சியைக் காண்பதற்கே கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஒரு வகையில் நாம் இருவருமே யோகம் செய்தவர்களாக இருக்கிறோம்..." என்றது. மற்றொரு தேவதை.

அனீலஸ் பறவையோ, தன் அருகே இரண்டு தேவதைகள் நின்று கொண்டிருப்பதை கவனித்தபடியே, பாய்ந்தோடும் நீர்வீழ்ச்சியில் இன்பமாக குளித்தது.

அதேநேரத்தில், நீர்வீழ்ச்சியின் வேகம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. நீர் வேகமாகத் தரையை நோக்கிப் பாயத் தொடங்கியது. வேகமாக இழுப்பு விசையோடு பாய்ந்த நீர், அனீலஸ் பறவையையும் தள்ளிக்கொண்டு சென்றது.

இதை எதிர்பாராத அனீலஸ் பறவை, தடுமாறியபடி பாய்ந்தோடும் நீரில் சிக்கிக்கொண்டது. அதைக் கண்ட தேவதைகள் இருவரும் திடுக்கிட்டனர்.

அதில் ஒரு தேவதை, "அதோ... அனீலஸ் பறவை ஆபத்தில் சிக்கி விட்டது. நான் சென்று உடனே காப்பாற்றுகிறேன்!" என்றது.

உடனே மற்றொரு தேவதை, "வேண்டாம்... அனீலஸை நானே சென்று காப்பாற்றுகிறேன். அந்த பாக்கியம் எனக்கே கிடைக்க வேண்டும்" என்றது.

அதைக் கேட்ட மற்றொரு தேவதையோ, "உன்னை விடவும் நான் குறைந்தவளில்லை. அனீலஸை காப்பாற்றும் பொறுப்பு என்னுடையது. எனவே, இந்த விடயத்தில் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்!" என்று கூறியது.

உடனே மற்றொரு தேவதை, "ம்கூம்... எனக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பை உனக்கு எப்படி விட்டுக் கொடுப்பது. எனக்கு கிடைத்த வாய்ப்பை நானே பயன்படுத்திக் கொள்கின்றேன். நானே அனீலஸை காப்பாற்றப் போகிறேன். எக்காரணம் கொண்டும் உன்னை அனீலஸைக் காப்பாற்றும்படி விட்டுக் கொடுக்க மாட்டேன்!" என்று பிடிவாதமாகக் கூறியது.

அந்த நேரத்தில், "கீச்... கீச்..." என்ற கீச் குரல் கேட்டது. இரண்டு தேவதைகளும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தன. அங்கே தேவதைகளின் அருகே, அனீலஸ் பறவை நின்று கொண்டிருந்தது.

"தேவதைகளே! உங்களுக்குள் சண்டை எதற்கு? நான் உயிர் பிழைத்து விட்டேன். நீங்கள் என்னைக் காப்பாற்றுவீர்கள் என்று நம்பிக் கொண்டிருந்தால், என் உயிரை எப்போதோ இழந்திருப்பேன். நானே முயற்சி செய்து போராடியதால் தான் இப்போது உயிர் பிழைத்து உங்கள் முன்னே நின்று கொண்டிருக்கிறேன்!" என்றது.

அதைக் கேட்ட இரண்டு தேவதைகளும், வெட்கத்தால் தலை குனிந்தன. "நமக்குள் போட்டியிட்டு தற்பெருமைப்பட்டுக் கொண்டோமே! இந்தப் பறவைக்கு இருக்கிற அறிவு கூட தேவதைகளான நமக்கு இல்லையே!" என்று வருத்தப்பட்டன.

"தேவதைகளே! ஏன் கவலைப் படுகிறீர்கள்? இனிமேலாவது உங்கள் பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள்... மனிதர்கள் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும் போது, நீங்கள் இப்படி அலட்சியமாக இருந்தால், மிகுந்த ஆபத்தாகி விடும்!" என்று அறிவுரை கூறியது அனீலஸ் பறவை. இரு தேவதைகளும் வெட்கத்தில் தலை குனிந்தன.




- 1672 - பிரான்சின் பதினான்காம் லூயி மன்னன் நெதர்லாந்தை முற்றுகையிட்டான்.
- 1770 - ஜேம்ஸ் குக் அவுஸ்திரேலியாவின் இன்றைய சிட்னியை அடைந்து தான் சென்ற இடத்துக்கு பொட்டனி விரிகுடா எனப் பெயரிட்டான்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: நியூ ஓர்லென்ஸ் நகரம் கூட்டணிப் படையிடம் வீழ்ந்தது.1882 - பெர்லின் நகரில் எலெக்ட்ரோமோட் எனப்படும் பேருந்து வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1903 - கனடாவின் அல்பேர்ட்டாவில் 30 மில்லியன் கன மீற்றர் நிலச்சரிவு ஏற்பட்டதில் 70 பேர் கொல்லப்பட்டனர்.
- 1916 - முதலாம் உலகப் போர்: பிரித்தானிய இந்தியப் படைகள் ஓட்டோமான் படைகளிடம் ஈராக்கின் கூட் என்ற இடத்தில் சரணடைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியில் ஜேர்மனிய இராணுவம் நேச அணிகளிடம் நிபந்தனையின்றி சரணடைந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நெதர்லாந்தின் பல பகுதிகளிலும் உணவுப்பொதிகளை விமானத்தில் இருந்து வீசும் மானா நடவடிக்கையை ஐக்கிய இராச்சிய வான் படையினர் ஆரம்பித்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஹிட்லர் ஏவா பிரௌன் என்ற தனது நீண்ட நாளைய காதலியை தனது பெர்லின் சுரங்க அறையில் வைத்து மணம் புரிந்தார். இருவரும் அடுத்த நாள் ஏப்ரல் 30இல் தற்கொலை புரிந்து கொண்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் டாக்கவ் என்ற இடத்தில் இருந்த வதை முகாமை அமெரிக்கப் படைகள் விடுவித்தனர்.
- 1946 - ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஹிடெக்கி டோஜோ மற்றும் 28 முன்னாள் தலைவர்கள் ஷ
- 1970 - வியட்நாம் போர்: அமெரிக்க மற்றும் தென் வியட்நாம் படைகள் வியட் கொங் போராளிகளைத் தேடி கம்போடியாவை முற்றுகையிட்டன.
- 1975 - வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க குடிமக்கள் சாய்கோன் நகரை விட்டு புறப்பட்டனர்.
- 1986 - லொஸ் ஏஞ்சலீஸ் நகர பொது நூலகம் தீப்பிடித்ததில் 400,000 நூல்கள் அழிந்தன.
- 1991 - பங்களாதேஷில், சிட்டாகொங்கில் இடம்பெற்ற சூறாவளியில் 138,000 பேர் வரையில் உயிரிழந்தனர். 10 மில்லியன் பேர் வீடுகளை இழந்தனர்.
- 1995 - நவக்கிரி என்ற இடத்தில் இலங்கை இராணுவத்தினரின் அவ்ரோ விமானம் 50 படையினருடன் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 2005 - 29 ஆண்டு கால முற்றுகையின் பின்னர் லெபனானில் இருந்து சிரியா முற்றாக வெளியேறியது.
- 2007 - வான்புலிகளின் இரண்டு வான்கலங்கள் கொழும்புக்கு வடக்கே 3 மைல் தொலைவில் உள்ள கொலன்னாவை எண்ணெய்க் குதங்களையும் 10 மைல் தொலைவில் உள்ள கெரவலப்பிட்டி எண்ணெய் குதங்களையும் குண்டு வீசித் தாக்கின.

பிறப்புகள்

- 1818 - இரண்டாம் அலெக்சாண்டர், ரஷ்யாவின் பேரரசன் (இ. 1881)
- 1848 - ரவி வர்மா, இந்திய ஓவியர் (இ. 1906)
- 1891 - பாரதிதாசன், புரட்சிக்கவிஞர், பாவேந்தர் (இ. 1964)
- 1938 - திமிலை மகாலிங்கம், ஈழத்து எழுத்தாளர் (இ. 2010)
- 1957 - மேமன்கவி, ஈழத்துத் தமிழ்க் கலை இலக்கியப் படைப்பாளி
- 1970 - அன்ட்ரே அகாசி, முன்னணி டென்னிஸ் ஆட்டக்காரர்

இறப்புகள்

- 1843 - வின்செண்ட் ரொசாரியோ, இலங்கையின் முதல் ஆயர்.
- 1980 - ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக், ஆங்கிலத் திரைப்பட இயக்குநர் (பி. 1899)
- 2015 - மயூரன் சுகுமாரன், இந்தோனேசியாவில் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட அவுஸ்திரேலியத் தமிழ (பி. 1981)
- 2015 - கோபுலு, தமிழக ஓவியர் (பி. 1924)

சிறப்பு நாள்

- ஜப்பான் - தேசிய நாள்
- அனைத்துலக நடன நாள்




| மரக்கறி வகைகள் | திருநெல வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 50 | 120 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 | 120 | 120 | 160 |
| தக்காளி | 110 | 100 | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 70 | 80 | 80 |
| கோவா | 100 | 200 | 80 | 80 | 100 | 120 |
| கரட் | 130 | 200 | 80 | 100 | 120 | 200 |
| பூசணி | 50 | 60 | 80 | 40 | 50 | 80 |
| புடோல் | 100 | 100 | 50 | 120 | 60 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 40 | 60 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 150 | 200 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 170 | 200 | 70 | 240 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 50 | 120 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 50 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | — | 120 | 50 | 50 |
| லீக்ஸ் | 60 | 100 | 40 | 160 | 80 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 200 | 120 | 160 |
| கறிமிளகாய் | 100 | 200 | 120 | 140 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 100 | 200 | 200 | 300 |
| போஞ்சி | 160 | 300 | 100 | 240 | 160 | 160 |
| கத்தரிதும்புள்ள | 80 | 50 | 15 | 80 | 40 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 70 | 20 | 70 | 80 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 80 | 60 | 50-60 |
| இராசவள்ளி | 200 | 300 | 160 | 200 | 160 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | — | — | 70 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | — | 10 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் வளர்ப்போம்;
நாட்டைக் காப்போம்.

*– நம்மவர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வெயிலைக் குறை என்று சூரியனைக் கேட்பது நியாயமல்ல

இந்த உலகத்தின் படைப்பு ஜீவராசிகளின் வாழ்வுக்கானது. ஆதிகால மனித சமூகம் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தது.

அந்த வாழ்வியல் இன்பகரமாக நகர்ந்தது. தொலைபேசி, இணையம், முகநூல் இல்லை என்ற குறையைத் தவிர ஆதிகால மனிதர்களின் வாழ்வு சலனமற்றது. கவலையற்றது.

கால ஓட்டத்தில் மனித சமூகம் புதிய கண்டுபிடிப்புக்களை நோக்கி பயணிக்க, வசதிகளும் வாய்ப்புகளும் பல்கிப் பெருகின.

மருத்துவ முன்னேற்றங்களும் போக்குவரத்து வசதிகளும் தொடர்பாடல் துறைகளும் தொழில்நுட்பங்களும் வானுயர்ந்தன. அறிவு என்ற சக்தியின் படைப்பாக இவற்றை நாம் பார்க்க முடியும்.

இத்துணை படைப்புக்களை மனித சமூகம் கண்டறிந்ததன் நோக்கம் மனித வாழ்வின் தரத்தை உயர்த்துவதுதான்.

ஆனால் வசதிகளும் வாய்ப்புக்களும் மனிதர்களுக்கு நோயை, துன்பத்தை, மன அழுத்தத்தை, போட்டியை, பொறாமையை, பழி தீர்க்கும் எண்ணத்தைக் கொடுத்தனவேயன்றி மனிதர்களை நிம்மதியாக மகிழ்வாக அன்பின் வடிவாக வாழ வைக்கவில்லை.

இதன்விளைவு வன்மங்களாக, அழிவுகளாக, கொலைகளாக மாறிக் கொண்டன.

கூடவே நாம் வாழும் இயற்கையை எங்களின் எண்ணற்ற தேவைகளுக்காக அழிக்கத் தலைப்பட்டோம்.

இதனால் இயற்கை சீற்றம் கொண்டது. நிலத்தை, நீரை, நெருப்பை, ஆகாயத்தை, காற்றைப் படைத்த இறைவன் அவை இந்தப் பூமியைக் காப்பாற்றி மனித வாழ்வுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் வண்ணம் செய்தான்.

ஆனால் நாம் மனிதர்களைக் கொல்லும் பொருட்டு பேராபத்தைத் தரும் அணுவாயுதங்கள்ளை கடலின் அடியில் வெடிக்க வைத்துப் பரிசோதனை செய்தோம் – செய்கிறோம்.

அமைதியாக இருக்க வேண்டிய கடலை நாம் சீண்டியதால் சுனாமியாக அது பொங்கி எழுந்தது.

ஆழிப் பேரலையின் அனர்த்தம் அப்பாவி மனிதர்களின் உயிர் பறிப்பாகப் போயிற்று.

இப்படியே இயற்கைச் சீற்றம் தொடர்கிறது; மழையின் ஒழுங்கீனம்; வெயிலின் கொடூரம்; காற்றின் கலக்கம் என எல்லாமும் மனித வாழ்வுக்கு இடையூறாகிற்று.

இப்போது நாம் படும் அவஸ்தையெல்லாம் ஐயா! வெயில் கொடூரம் தாங்க முடியவில்லை என்பதுதான்.

வெயில் கொடுமை என்றால் சூரியனிடம் வெயிலைக் குறை என்றா கேட்க முடியும். அப்படிக் கேட்டால் அது நடக்கப் போகின்ற காரியமா என்...

வெயிலைக் கு... என்று சூரியனிடம் மனு அனுப்பி மன்றாடுவதை விட, மரங்களை உண்டாக்குவதே ஒரே வழி.

இதுவே சூரியனும் நமக்குச் சொல்லக் கூடிய அறிவுரையாக இருக்கும்.

## நஷ்டஈடு பிரேரணை

(கொழும்பு)

மீதொட்டமுல்ல அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாரபட்சம் பாராது நஷ்டஈடுகள் வழங்கப்பட வேண்டும் என்று த.தே. கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிவினால் ஏற்பட்ட அனர்த்தம் குறித்து பாராளுமன்றத்தில் நேற்றுக் காலை விசேட விவாதம் ஆரம்பமானது.

இதற்கான பிரேரணையை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உரையாற்றினார்.

குப்பைக் கூளங்கள் தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

கழிவு முகாமைத்துவம் குறித்து விசேட வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் முறையாக முன்னெடுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், அரசியல் வேறுபாடுகளை களைந்து இதுவிடயம் குறித்து செயலாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கூறினார்.

இதேவேளை இப் பிரேரணையை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வழிமொழிந்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கூட்டுறவு ஊழியர்களின் ஒற்றுமையை உலகிற்குக் காட்ட அணிதிரண்டு வருக!

### வடக்கு கூட்டுறவு ஊழியர் சங்கம் அழைப்பு

பொருளாதார சுமைகளால் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் சம்பள உயர்ச்சி மற்றும் விசேட படிக் கொடுப்பனவுகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக கூட்டுறவுத் திணைக்களத்தின் ஊடாக சுற்று நிருபங்களை வெளியிட்டு கூட்டுறவு ஊழியர்களின் வாழ்வில் ஓரளவு பொருளாதார உயர்ச்சியை வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன பெற்றுக்கொடுத்துள்ளார்.

மேலும் வரும் மே தினத்தில் சகல கூட்டுறவு ஊழியர்களும் தவறாது கலந்து கொண்டு கூட்டுறவு ஊழியர்களின் ஒற்றுமையை, பலத்தை உலகிற்குக் காட்ட அணிதிரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் என வட மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிலாளர் சங்க தலைவர் வ.சிவகுமார் அறிவித்துள்ளார். (இ)




ஆச்சரியப்படுத்தும் விதத்தல் அமைந்திருக்கிறது திருவேங்கட மலை. தமிழ்நாட்டில் ஆனை மலையில் இருந்து தொடங்கும் கிழக்குத் தொடர்ச்சி மலையானது கர்நாடக எல்லையைத் தொட்டு ஆந்திர எல்லையில் நுழைந்து ஸ்ரீ சைலம் வரை நீள்கிறது.

இந்த மலைத் தொடர் ஆந்திராவில் நுழையும் இடத்தில் திருவேங்கட மலை தனித்து அமைந்திருக்கிறது. திருவேங்கடம் தொடங்கி ஸ்ரீ சைலம் வரை நீண்டிருக்கும்.

மலைத் தொடரானது படம் எடுத்தபடி படுத்திருக்கும் ஒரு பாம்பின் நிலையில் அமைந்திருப்பது வியப்பூட்ட வைக்கும் ஓர் இயற்கை அமைப்பு.

படமெடுக்கும் சர்ப்பத்தின் ஏழு தலைகளாக ஏழு சிகரங்கள் அமைந்திருக்கின்றன. இந்த ஏழு தலைகளின் மையப்பகுதியில் ஏழுமலை ஆண்டவன் இடம் கொண்டுள்ளான். (தொடரும்)

## கூட்டத்துக்கு வராவிட்டால் சட்ட நடவடிக்கை கிடையாது

### அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்துக்கு வருகை தராத கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கட்சி இதுவரையில் எந்தவொரு தீர்மானத்தையும் முனனெடுக்கவில்லை யென சமூக நலத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சகலரையும் கட்சியுடன் இணைத்துக் கொள்வதே கட்சியின் நோக்கம் எனவும் இந்த நிலைப்பாட்டுடன் உள்ள சகலருக்கும் மேதினததுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினர் கண்டி கூட்டத்துக்கும் மற்றொரு பகுதியினர் காலிமு கத்திடல் கூட்டத்துக்கும் செல்லவுள்ளனர். மற்றும் சிலர் எந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்ளாதிருக்கவும் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சாஸ்திரங்கள்

✦ பெரியவர்களையும் பெற்றவர்களையும் இம்சித்தவர்களை இனம்புரியாத ராட்சத பூச்சிகளால் வதைக்கப்படுவது -காலசூத்திரம் (கருடபுராணம்)

✦ தன் தெய்வத்தை நிந்தித்து தனக்குரிய தர்மங்களை புறக்கணித்தவர்கள் விஷத் தாவரங்களுக்கு மத்தியில் எமகிங்கரர்களால் அடித்து உதைப்பது -அசியத்திரம் (கருட புராணம்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், வில்லூன்றி கேணியடி, நாவாந்துறை ஒருபகுதி, முத் தமிழ் வீதி, மீனாட்சி அம்மன் கோவிலடி, யாழ்.சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து ஏ- 9 வீதி ஊடாக நெளுக்குளம் ஊடாக ராஜேந்திரகுளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பம்பை மடு வரை, ஒமேகா லைன், UNHCR குருமன்காடு, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, பம்பைமடு பல்கலைக் கழகம், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, கயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**பெண்ணின் பொறுப்புக்கள் எவை?**

பெண்களை வணங்குமிடத்தில் தேவதையின் அருள் அதாவது லட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்பதாகும்.

பெண்களை வணங்குதல் லட்சுமி கடாட்சத் திறக்கும் அவளை நிந்திப்பது மூத்த பகவதி கடாட்சத்திற்கும் காரணமாக அமையும்.

வட்டின் மொத்தப் பொறுப்பையும் வகிப்பது பொதுவாக உத்தமியான பெண்கள் தான். வீட்டு வேலைகள், சமையலறை வேலைகள, குழந்தைகளின் கல்வி, கணவனின் குடும்ப ஆட்சி ஆகிய அனைத்துச் செயல்களுக்கும் மூக்கணாங்கயிறு பிடித்து புனிதமான குடும்ப தர்மத்தை வழி நடுத்துவது பெண்களாகும். (தொடரும்)




## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உலகிற்கு நன்மை செய்ய நமக்கு முடி யுமா? பரமார்த்திக முறைப்படி இயலாது; வியாவகாரிக முறைப்படி இயலும்.

❖ அனைவரும் அரும்பாடு படுவோம் சகோதரர்களே! உறங்க இது காலமல்ல. அவள் அங்கே தயாராகக் காத்திருக்கி றாள். அவள் உறங்குகிறாள் என்பது மட் டுமே.

❖ சிவபெருமானுக்குப் பணி செய்ய விரும்பு பவன் அப்பெருமானின் மக்களுக்குப் பணி செய்ய வேண்டும். முதலில் இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் பணி செய்யவேண்டும். இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவருக்கு உத்தமத் தொண்டர்கள் ஆவர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

❖ தன்னலம் இன்மையே சமய வாழ்க்கைக்கு உரைகல். இந்தத் தன்னலமின்மை நிறைந்தவன் ... தன்னலம் கருதுபவனாயிருந்தால் அவன் பல கோயில்களைத் ... கண்டவனாயிருந்தாலும் சிறுத்தையின் உருவத்தைத் தன்மீது வரைந்து வைத்திருந்தாலும் இன்னும் சில சிவபெருமானுக்கு வெகு தொலைவில் இருப்பவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம்-2017 யாழ்.பல்கலை. காலிறுதிக்கு தெரிவு



கே.சி.சி.சி .வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் 24ஆவது ஆண்டாக நடத்தி வரும் சுற்றுப் போட்டித் தொடரின் 2 ஆவது சுற்றில் யாழ்.பல்கலைக் கழக அணி, நியூஸ்ரார் அணியை 79 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 30 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 270 ஓட்டங்களை பெற்றது.

றொசான் - 15, தீபன் - 32, கபில்ராஜ் - 27, செந்தூரன் - 56, கல்கோசன் - 64, ருக்ஸ்மன் - 42, குருகுலசூரிய - 23 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் மோகனதீபன் - 01, பிரசாந் - 03, றொசான் - 01, றமணன் - 01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 27 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 191 ஓட்டங்களை பெற்றது.

மோனதீபன் - 39, பிரசாத் - 29, கஜேந்திரா - 19, ரமணன் - 12, கபில்ராஜ் - 15 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் ஜனன்தன் - 03, டனுஸ்கா - 02, துவாரகசீலன் - 01, லோகதீஸ்வர் - 01, குருகுலசூரிய - 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் தரவரிசை பட்டியலுக்கு யாழ்.பல்கலைக்கழக அணி 7.49 புள்ளிகளையும் நியூஸ்ரார் - 2.16 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டங்களிற்கிடையே நடத்திய பெண்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட பெண்கள் அணியினரை படத்தில் காணலாம்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III ஹாட்லியைற்ஸ் 2ஆவது வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ்.நகரில் இருந்து இரு அணிகளை தெரிவு செய்வதற்காக தகுதிகாண் போட்டி வரிசையில் 9ஆவது போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணி, கிறாஸ் கொப்பர்ஸ் அணியை 19 ஓட்டங்களால் வெற்றிபெற்று 2ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 44.2 ஓவர்களில் 315 ஓட்டங்களை பெற்றது.

சாகித்தியன் - 17, மணிமாறன் - 146, சேயோன் - 31, புருசோத்மன் - 63 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜனுஸ் - 01, டிலோஸன் - 01, சாரு - 01, சுஜீவன் - 04 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 43.1 ஓவர்களில் 296 ஓட்டங்களை பெற்றது.

மதுஸன் - 37, சுஜீவன் - 20, சாருஜன் - 53, சஜீத் - 25, றகீம் - 93, ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் பிரசாத் - 03, பிரதீப் - 02, புருசோத்மன் - 02, சாகித்தியன் - 02, நிதர்சன் - 01 இலக்கினை கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் தர வரிசைப்பட்டியலுக்கு ஹாட்லியைற்ஸ் அணி 9.34 புள்ளிகளையும், கிறாஸ்கொப்பர்ஸ் அணி 3.96 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)

# யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக் உதைபந்தாட்டம்: Super Boys - King Star ஆட்டம் சமநிலையானது

யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் (26.04.2017) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் Super Boys அணியை எதிர்த்து king star அணி மோதியது.

முழுநேர ஆட்ட நிறைவில் 02:02 என்ற கோல் அடிப்படையில் ஆட்டம் சமநிலையானது.

Super Boys அணி சார்பாக நிறோ-02 கோல் போட்டார்.

king star அணி சார்பாக விமல், பார்த்தீபன் தலா ஒரு கோல் போட்டனர்.

போட்டியின் ஆட்ட நாய்கனாக Super Boys அணி வீரர் அபி தெரிவு செய்யப்பட்டார். (க)







# Jolly Boys அணியை வீழ்த்தி முதல் இடத்தில் Young Star



யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக் உதைபந்தாட்ட தொடரின் (26.04.2017) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் Jolly Boys அணியை எதிர்த்து Young Star அணி மோதியது.

இறுதியாட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் Jolly Boys அணியைவீழ்த்திவெற்றியீட்டியது Young Star அணி.

Young Star அணி சார்பாக ரகுவரன் - 02 கோல் போட்டார். Jolly Boys அணி சார்பாக [illegible]தன் - 01 கோல் போட்டார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக Young Star அணியின் பின்கள வீரர் ராகவர்ணன் தெரிவு செய்யப்பட்டார். இப் போட்டி முதலில் யங்கம்பன்ஸ் பிறீமியர் லீக்கில் Young Star அணி முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டது. (க)



# மீண்டும் எல்லே சம்பியனாகியது இமையாணன் மத்தி பெண்கள் அணி



கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கான எல்லே போட்டியில் (25.04.2017) அன்று நடைபெற்ற அரையிறுதியில் NCC அணியை 01:00 என்ற அடிப்படையில் வீழ்த்தியது.

இறுதிப்போட்டியில் மனோகரா அணியை 05:03 என்ற அடிப்படையில் வீழ்த்தி இவ்வருடம் இரண்டாவது எல்லே சம்பியனாகியது இமையாணன் மத்தி பெண்கள் அணி. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2020ம் ஆண்டில்...

தமது கட்சியின் அமைச்சர்களை உள்ளடக்கிய அமைச்சரவையுடைய அரசாங்கத்தை ஏற்படுத்துவதே தமது நோக்கம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாரச்சி கூறியுள்ளார்.

நேற்று ஐக்கிய தேசிய கட்சியின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலைத் திட்டங்கள் இல்லாத அனைத்து பிரிவுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி அதனூடாக முறையான வேலைத்திட்டங்களை தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும், இதனூடாக அரசாங்கம் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் தனியான அரசாங்கமாக ஆட்சியமைப்பதற்கு மற்றும் கட்சியை மேலும மேலும் பலப்படுத்துவதற்கு விருப்பமுள்ள அனைவரும் பிரதமர் தலைமையில் இடம் பெறுகின்ற மே தின நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அவர் இதன்போது அழைப்பு விடுத்துள்ளார். (செ-11)

## ஜனாதிபதியின்...

யில்.

பணிப்புறக்கணிப்புகள் அதிகரித்துள்ளமை குறித்து அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போது உங்களால் இதனை கட்டுப்படுத்த முடியாதா என் ஜனாதிபதி அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் கேலியாக கேட்டுள்ளார். அதனை எல்லோரும் பெரிதுபடுத்திவிட்டனர்.

போராட்டங்களை அடக்க பாதுகாப்பு துறையில் தனியான பதவியை ஏற்படுத்த ஜனாதிபதி கனவிலும் எண்ணவில்லை.

அமைச்சரவைக் கூட்டத்திற்கு நான் சென்றிருக்கவில்லை. ஊடகங்களில் இது பற்றி அறிந்து கொண்டதும் நான் ஜனாதிபதியை சந்தித்தேன்.

கேலியாக தான் அதனை கூறியதாகவும் அப்படியான ஒன்றை செய்ய எந்த வகையிலும் தான் எண்ணியிருக்கவில்லை எனவும் ஜனாதிபதி கூறினார்.

இதனை அரசியல் பிரச்சினையாக மாற்றிய சில கட்சிகள் தமது மே தினக் கூட்டத்திற்கு அதை பயன்படுத்த முயற்சித்து மக்களை அச்சுறுத்தி காலிமுகத்திடலுக்கு ஆட்சேர்க்கவும் திட்டமிட்டுள்ளனர்.

அதேவேளை அமைச்சரவையின் பேச்சாளர் கூறும் விடயங்களை பொறுப்புடன் கூறவேண்டும். அவர் கூறும் விடயங்கள் பெறுமதியானது.

அமைச்சர் ராஜித இதனை கூறியிருந்தால், அது குறித்து அவர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் அதிகார பீடத்தில இருப்பவர்களும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என அமைச்சர் ஜோன் செனவிரட்ன மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மே தினத்துக்கு...

யுள்ளன என்று, இலங்கை போக்குவரத்துச் சபை தகவல் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பணம் செலுத்தப்பட்டதன் பின்னரே, உரிய பேருந்துகள் கையளிக்கப்படும் என்று, சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி பி.எச்.ஆர்.டி.சந்திரசிறி தெரிவித்தார்.

அந்த வகையில், 100 கிலோமீற்றர் தூரத்துக்கு குறைவாயின் பேருந்து ஒன்றுக்காக 7ஆயிரத்து 500 ரூபாயும் 100க்கும் 150 க்கும் இடைப்பட்ட கிலோமீற்றருக்காக 11 ஆயிரம் ரூபாயும், 250 கிலோமீற்றருக்கு 13 ஆயிரத்து 500 ரூபாயும், 350 கிலோமீற்றருக்கு 16 ஆயிரத்து 500 ரூபாயும் 750 கிலோ மீற்றருக்கு மேற்பட்டால் 35 ஆயிரம் ரூபாயும் அறிவிடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## விபத்துக்குள்ளான...

இளைஞர் ஒருவர் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பளை முல்லையடியை சேர்ந்த பசுபதி வேனுகாந் (வயது 24) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப இளைஞன் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இயக்கச்சியில் இருந்து பளை நோக்கி மோட்டார் சைக்கிளில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்த போது, புதுக்காட்டு சந்தியில் உள்ள வளைவில் மோட்டார் சைக்கிளை திருப்பும் போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள கால்வாய்கக்குள் விழுந்துள்ளார்.

வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதியில் படுகாயமடைந்த இவரை வீதியால் சென்றவர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர். மேலதிக சிகிச்சைக்காக மறுநாள் 9ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப நபர். சுமார் மூன்றரை மாதங்களுக்கு மேல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயரிழந்துள்ளார்.

இவ் மரண விசாரணையை யாழ்போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## துணைவேந்தராக...

. தல் நேற்று காலை ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபயகோன் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த 22ஆம் திகதியுடன் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தின் பதவிக்காலம் நிறைவடைந்த போதிலும் புதிய துணைவேந்தர் நியமனத்தில் ஏற்பட்ட இழுபறி காரணமாக அவரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் நடத்தப்பட்ட துணைவேந்தர் தெரிவில் முன்னிலை வகித்த பேராசிரியர் சிறிசற்குணராஜா (17 வாக்குகள்), பேராசிரியர் விக்னேஸ்வரன் (11 வாக்குகள்), பேராசிரியர் வேல்நம்பி (09 வாக்குகள்) ஆகியோரது பெயரகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பரிந்துரையுடன் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த 24ஆம் திகதி தொடக்கம் மூன்று வருட காலத்துக்கு பேராசிரியர் விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகத்தினால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-4,9)

## விசாரணை...

அரசியல் கைதி ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை ஒன்றை நடத்துமாறு வலியுறுத்தி சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு எழுத்து மூல கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் பணியிலிருந்து நிறுத்தப்பட வேண்டும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

1999ஆம் ஆண்டு இடம்பெற்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதான தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட வேலாயுதம் வரதராஜன் என்பவர் மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

வேலாயுதம் வரதராஜன் கடந்த 21ஆம் திகதி சுகவீனமுற்ற நிலையில் சிறைச்சாலை வைத்திய அதிகாரியின் பணிப்புரைக்கு அமைய வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்ட நிலையில் மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் இந்த தாக்குதலுக்கான முழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுந்தரம் மகேந்திரன், சிறைச்சாலை தலைமையகத்திற்கு நேற்று விஜயம் செய்து எழுத்து மூலமாக கோரிக்கை கடிதத்தை கையளித்துள்ளார். (செ-11)

## படகுகளை...

திய மீனவர்களுக்குச் சொந்தமான படகுகளை விடுவிக்க வேண்டுமாயின், அதற்கு வடமாகாண மீனவச் சங்கங்களின் விருப்பம் அத்தியாவசியமானதென, மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பல நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இதன் ஒரு கட்டமாக இந்தியப் படகுகளை விடுவிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. எவ்வாறாயினும் இது தொடர்பில் இலங்கை மீனவ சங்கங்களின் ஒத்துழைப்பு இருப்பதாயின் மாத்திரமே படகுகள் விடுவிக்கப்படும் என்று, அமைச்சர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## இலங்கை...

த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஈரான் பாதுகாப்பு அமைச்சர் ஹெசெய்ன் டெய்கன் மற்றும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் சரத் குமாரவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவின் மொஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு தொடர்பான மாநாட்டின் பக்க அமர்வாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்த இரு நாடுகளும் இதன்போது ஆராய்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யாவில் இடம்பெற்ற பாதுகாப்பு மாநாட்டில் பல்வேறு உலக நாடுகளும் பங்கேற்றுள்ளன.

சர்வதேச பயங்கரவாதம் காரணமாக உலகில் எழுந்துள்ள பாதுகாப்பு பிரச்சினைகள குறித்து இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## குடும்பஸ்தர்...

ள்ளார்.

பேருந்து நடத்துனரான கணேசமூர்த்தி கலைச்செல்வன் (வயது 34) என்ற குடும்பஸ்தரே இதில் உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையின் போது, குடும்பப் பிணக்கினால் பிரஸ்தாப குடும்பஸ்தர் தற்கொலை செய்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தாம் மேலதிக விசாரணை களை முன்னெடுத்துவருவதாக பொலிஸார் கூறியுள்ளனர். இதேவேளை, சடலம் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (செ-29,312)

## அலரி விதை...

பெண் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவரது கணவனால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து குறித்த குடும்பப் பெண்ணுக்கு அவசர தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்தில் மரணமடைந்துள்ளார்.

சரசாலை தெற்கு சாவகச்சேரியை சேர்ந்த சசிதரன் பகிரதி (வயது 30) என்ற இளம் குடும்பப் பெண்ணே மரணமடைந்தவராவார்.

குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே குறித்த பெண் அலரி விதையை உட்கொண்டு மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (செ-89)

## ஹக்கீம்...

எதிர்க்கட்சித் தல்லைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கராங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கிடையில் நேறறு சந்திப்பொன்று இடம்பெற்றது.

நேற்று முற்பகல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற சந்திப்பில் மாணிக்கமடு மாயக்கல்லி மலை விவகாரம் தொடர்பில் பலவேறு சாதகமான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளதா்க கிழக்கு மாகாண முதலமைச்சர ஹாபிஸ் நசீர் அஹமட்டினால் வெளியிடப்பட்டுள்ள ஊடகக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறக்காமம் மாணிக்கமடு மாயக்கல்லி மலையை அண்டிய பகுதியில் சிறுபான்மையினரின் காணிகளே உள்ளன எனவும் அவர்களின் காணி உறுதிகள் உட்பட ஆவணங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன் கிழக்கில் காணப்படும் சிறுபான்மையினரின் காணி ஆக்கிரமிப்புக்கள், அத்துமீறல்கள் தொடர்பிலும் ரவூப் ஹக்கீம் இதன் போது ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரா.சம்பந்தன் மற்றும் ரவூப் ஹக்கம் ஆகியோர் மாணிக்க மடு தொடர்பில் ஜனாதிபதியிடம் [illegible]மான கோரிக்கைகளை [illegible] எனவே இது தொடர்பில் ஜனாதிபதியினால் சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுக்கூடிய சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## புலம்பெயர் புலி...

கட்டுப்படுத்துவதற்கான தேவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு இல்லையெனவும் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சாந்த பண்டார யாழ்ப்பாணத்திலிருந்து மே தினத்திற்கு முதல் நாள் 2500 பேர் வரையில் வந்துவிடுவார்கள். வடக்கு கிழக்கில் நடைபெறும் ஹர்த்தால், மே தினத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. எனினும் அந்த மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டுமென்பது எமது நிலைப்பாடு. பொன்சேகாவை பயன்படுத்தி போராட்டங்களை தடுக்கவோ, யார் மீதும் தாக்குதல் நடத்துவதற்கோ எவ்வித அவசியமும் ஜனாதிபதிக்கு இல்லை.

எமது நாடு தொடர்பில் சர்வதேசம் ஒரு தவறான பார்வையைக் கொண்டிருந்தது. எனினும் அது தற்போது மாற்றம் பெற்றுள்ளது. இந்த நாடு முன்னோக்கிச் செல்வதற்கு எதிராக இருந்தவர்களே, ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை எமக்கு கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்திலும் செயற்பட்டார்கள்.

புலம்பெயர் நாடுகளிலுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களே எமக்கு எதிராக அந்த யோசனையை முன்வைத்தார்கள். இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் இடையிலான நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை இல்லாதொழிக்க பலர் முயற்சிக்கின்றனர். அவர்களுக்கு வரும் வருமானம் போதவில்லை.

மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, பலரையும் ஒன்றிணைத்துக் கொண்டு வெளிநாடுகளில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதாக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இதனை முன்னிறுத்தியே ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைக்கு எதிராகவும் பிரேரணையை கொண்டுவந்தனர். எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல நாடுகள் எம்முடன் இருக்கின்றனர் என சாந்த பண்டார தெரிவித்தார். (செ-11)

## அடக்கு முறைகளுக்கு ...

தில் குறிப்பிடப்படும் குற்றம் இடம்பெற்றால் அக்குற்றவாளி இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூன்றாவது பகுதியில் மூன்று வகையான குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது முதலாவது வகையாக பயங்கரவாதக் குற்றமும் இரண்டாவது வகையாக பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட குற்றமும் மூன்றாவது வகையாக தொடர்புபட்ட குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என கெய்ன்ஸ் மற்றும் பிஷர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் ஒருவர் 'தடுப்புக் கட்டளையின்' கீழ் எவ்வித குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாவிட்டாலும் நான்கு மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட முடியும். இது மனித உரிமை நெறிமுறைகளுக்கு முரணானதாகும். எவ்வித குற்றங்களும் நிரூபிக்கப்படாதவிடத்தும் சந்தேக நபர்கள் இரண்டு ஆண்டுகள் வரை தடுத்து வைக்கப்படுவதற்கான அதிகாரத்தை இச்சட்டம் வழங்குகிறது.

இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படும் ஒருவர் 12 மாதங்களின் பின்னரே நீதி நடைமுறைக்குள் கொண்டு வரப்படுவார். குற்றம் நிரூபிக்கப்படாத சந்தேக நபர்கள் 2 வருடங்கள் வரை தடுத்து வைக்கப்படுவதால் இவர்கள் நீண்ட காலம் தடுப்பில் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் குற்றவியல் சட்டத்தில் உள்ளது போன்று சட்டவாளர் ஒருவரின் உதவியை நாடமுடியும் எனக் கூறப்படுகிறது. ஆனால் சட்டவாளருக்கு அனுமதி கிடைக்கும் போது மட்டுமே இவர் தடுத்து வைக்கப்படும் சந்தேக நபரைச் சந்திக்க முடியும் எனவும் விசாரணைகள் இடம்பெறும் போது இதற்கு அனுமதிக்கப்படாது எனவும் குற்றவியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதாக கெய்ன்ஸ் மற்றும் பிஷர் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பயங்கரவாத...

சலுகை கிடைத்தமைக்கும் தொடர்புகள் உள்ளதா என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல் என்ற அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கும் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கிடைக்கவுள்ளமைக்கும் எந்தவித தொடர்புகளும் இல்லை. எனினும் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதன் மூலம் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கிடைக்கும் வழிமுறை மேலும் உறுதிப்படுத்தப்படும்.

மேலும் பய்ங்கரவாத தடுப்புச் சட்டம் மாறப்போகின்றது எனவும் சர்வதேச தேவைக்காக வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் சிலர் இன்று பேசுகின்றனர்.

உண்மையில் பயங்கரவாதமானது இலங்கைக்கும் ஏனைய ஒரு சில நாடுகளுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயற்பாடு அல்ல. இன்று மேற்கத்தேய நாடுகள் பயங்கரவாதம் என்றால் என்ன என்பதை உணர ஆரம்பித்துள்ளன.

நாம் கடந்த முப்பது ஆண்டுகளில் எதிர்கொண்ட அனுபவங்கள், எமது மக்கள் அனைவரும் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பில் அவர்களும் உணர ஆரம்பித்துள்ளனர். சர்வதேச தரப்பில் இந்த உண்மைகளை நாம் வெளிப்படுத்தி வருகின்றோம். இன்று சர்வதேச நாடுகளுக்கு இலங்கை நல்லதொரு முன்னுதாரண நாடாக மாறியுள்ளது.

ஒருபுறம் மனித உரிமைகளை பாதுகாக்கும் அதே நிலையில் மறுபுறம் பயங்கரவாத்தை கட்டுப்படுத்தவும் வேண்டும். இரண்டையும் சரியாக கையாண்டால் மாத்திரமே பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

ஆகவே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் இந்த சமநிலைத்தன்மை உருவாக்கப்படும். அதற்கான முயற்சிகளையே நாம் மேற்கொண்டு வருகின்றோம். கடந்த காலத்தில் பயங்கரவாத தடுப்பு சட்டம் தவறான வகையில் கையாளப்பட்டுள்ளது என்பதே உண்மையான காரணியாகும் என அவர் குறிப்பிட்டார். (செ-11)

## தாயகம் திரும்பும்...

தாயகம் திரும்பியுள்ளனர்

இதேவேளை, தமிழகத்திலிருந்து 46 அகதிகள் நேற்று முன்தினமும் தாயகம் திரும்பினர்.

கண்டியைச் சேர்ந்த 4 பேரும் கொழும்பைச் சேர்ந்த ஒருவரும் அடங்கலாக 46 பேர் நாட்டை வந்தடைந்துள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும் திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களும் வருகை தந்துள்ளனர்.

தாயகம் திரும்பும் அகதிகளுக்கு தேவையான தற்காலிக வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுவதோடு போக்குவரத்து உள்ளிட்ட சில தேவைகளுக்கான கட்டணங்களும் வழங்கப்படுவதாக மீள்குடியேற்ற அமைச்சு தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. (செ-11)

## வித்தியா கொலை...

2015.05.13ஆம் திகதி புங்குடுதீவு பிரதேசத்தில் காலையில் பாடசாலைக்கு சென்ற குறித்த மாணவி இனந்தெரியாத சிலரால் கடத்தி செல்லப்பட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில் குறித்த மாணவி மறுநாள் காலையிலேயே சடலமாக உறவினர்களால் பற்றைக்காட்டு பகுதியில் இருந்து மீட்கப்பட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸாரால் குறித்த பாலியல் வன்புணர்வு மற்றும் கொலை ஆகியவற்றை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒன்பது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒன்பதாவது சந்தேகநபர் தப்பிச் சென்றிருந்த போதும் வெள்ளவத்தை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். பின்னர் இவ் வழக்கானது குற்றப் புலனாய்வு பிரிவுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைகளானது இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்று ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் குறித்த மாணவியின் வீட்டிற்கு சென்று அஞ்சலி செலுத்தியிருந்த நபரான ராஜ்குமார் என்பவரை ஊர்காவற்றுறை பொலிஸார் இவ் வழக்கோடு தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்திருந்தனர்.

இவற்றைவிட இவ் வழக்கினை விசாரணை செய்து வரும் குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸாரும் மேலும் இருவரை இவ் வழக்கின் சந்தேகநபர்களாக கைது செய்திருந்தனர். அத்துடன் தமது வழக்கின் ஆரம்பகட்ட விசாரணை அறிக்கையையும் மன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

இவ்வாறான நிலையில் பத்தாவது சந்தேகநபராக கைது செய்யப்பட்ட ராஜ்குமார் என்பவர் சற்று சித்த சுவாதீனமற்றவர் எனவும் அவருக்கும் இவ் வழக்கிற்கும் எதுவிதமான சம்மந்தமும் இல்லையெனவும் அவர் தரப்பு சட்டத்தரணி தனது தரப்பு வாதங்களை முன்வைத்தும் இருந்தார்.

அத்துடன் குறித்த பத்தாவது சந்தேகநபர் கைது செய்யப்பட்டு ஒரு வருடங்களை கடந்த நிலையில் அவரை ஒருவருடங்களை கடந்தும் தொடர்ந்து நீதவான் நீதிமன்றில் விளக்கமறியலில் வைத்திருப்பதற்கான அனுமதியை பெறுவதற்கு யாழ்.மேல் நீதிமன்றில் முற்படுத்திய சந்தர்ப்பங்களிலும் குறித்த பத்தாவது சந்தேகநபரும் தனக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி, யாழ்.மேல் நீதிமன்றில் இறுதியாக் இடம்பெற்ற பிணை விண்ணப்பம் மீதான வழக்கில் பிரதி சொலிஸ்ர ஜெனரலான குமார்ரட்ணம் இவ் வழக்கில் குறித்த பத்தாவது சந்தேகநபருக்கு பிணை வழங்குவது தொடர்பாக இறுதி தீர்மானம் எடுப்பதற்காக தமக்கு மே மாதம் 2ஆம் திகதி வரை கால அவகாசம் கோரி தனது பிணை வழங்குவது தொடர்பான ஆட்சேபனையை தெரிவித்திருந்தார். இதற்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனும் அனுமதித்து உத்தரவிட்டிருந்தார்.

இத்தகைய நிலையிலேயே நேற்றைய தினம் சட்டமா அதிபர் திணைக்களம் வித்தியாவின் பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கில் இருந்து பத்தாவது சந்தேகநபரான ராஜ்குமார் மற்றும் பன்னிரண்டாவது சந்தேகநபரான ரவீந்திரன் ஆகியோரை விடுதலை செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றுக்கு அனுமதியளித்திருந்தது. இதன்படி நேற்றைய தினம் காலை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது இவ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொண்ட ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா குறித்த இருவரை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய விடுதலை செய்து உத்தரவிட்டிருந்தார். (செ-4)

## ஆணைக்குழுவின்...

காலம் ஜூலை 27ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் செயலாளர் சுமதிபால உடுகமசூரிய தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமையவே அதன் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆவணத்தை ஆணைக்குழு பெற்றுள்ளது என்றும் இதுவரை 14பேரிடம் ஆணைக்குழு சாட்சியங்களை பதிவு செய்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (செ-11)

STUDY IN EUROPE

Why Study In Europe?
* ஆகக்குறைந்த தகைமை GCE(A/L)
* ஆங்கில மொழி மூல பாடநெறி
* IELTS தேவையில்லை.
* வயது எல்லை கிடையாது.
* 100% விசா உத்தரவாதம்.
* மிகக்குறைந்த பாடநெறி கட்டணம்.
* பகுதிநேர வேலைவாய்ப்பு.
Admission open for Sep-2017
***** Limited Seats Available *****
iCS DREAM BEYOND BOARDERS Foreign Education Services
Admisson:076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

கார் விற்பனைக்கு
கார்கில்ஸ் பூட்சிட்டி Taxi Roud உடன் கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
077 420 0987
(சி-8403)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

பணியாளர் வேண்டுகை
யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிக்கும் பின்வரும் பதவிகளுக்கான அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அப்பதவிக்கான சம்பளம் மற்றும் தொழில் விபரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
1.அச்சியந்திரம் இயக்குநர் (ஒப்செற்)
2.ரைப் செற்றிங்
3.புத்தகம் கட்டுநர்
4.போட்டோ கொப்பி இயந்திரம் இயக்குநர்
பழக விரும்புபவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மாருதி பிறிண்டர்ஸ்
555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 791 7680
(சி-8405)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
CERTIFICATE COURSE IN ENGLISH
14 Batches have successfully Completed the courses 15th batch commences on 29th April 2017.
Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149
(சி-8283)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-8229)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-8273)

வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்தில் நிரந்தரமாக பணிபுரியக் கூடிய கணனி அறிவுள்ள, ரைப்பிங் செய்யத் தெரிந்த, நல்லொழுக்கம், நற்பண்புள்ள பெண் பணியாட்கள் தேவை. தகுதியானவர்கள் மேலதிக விபரங்களுக்கு நேரில்வருகைதரவும்.
செல்வா கொமினிக்கேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(பொஸ்கோ பாடசாலை சந்தி)
(8829)

7ம் அணி அனுமதிகள் முற்றுப்பெற்றன
8ம் அணியில் இணைய முந்துங்கள்!
O/L உடன் மாதம் 25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 8ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் மே 10 திங்கள் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம்.
(சி-8289)

யாழ் மதர் கெயார்
Dental Unit
Reg.No.#PV85754

நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால்
கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல்
உட்பட உயர்தர சேவைகள்
• பல் வெண்மையாக்கல் • பல்,வாய் வைத்தியசேவை
• வேரடைப்பு • சிறுவர் பற் சிகிச்சை
• மிதப்புப்பல் சீராக்கல் • மற்றும் பல நவீன சேவைகள்
514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 492 7308
Mob : 077 375 4490, 077 220 2769

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... யிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org